
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பிப்ரவரி-1981

மாசி



திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் ஊஞ்சல் சேவை

ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எல்லாக் குணங்களையும் அவஸ்தைகளையும் கடந்து விளங்குகிறார். அவர் அவற்றால் பாதிக்கப்படவில்லை; அவைகள் அவரைப் பாதிக்கவும் முடியாது. ஆனால், பக்தர்கள் அந்த ஒப்பற்ற பரம்பொருளைத் தங்கள் உள்ளத்திலேயே உணர்ந்து அனுபவிக்கிறார்கள். ஆகையால் பக்தர்கள், ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் எப்போதும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் கவலையற்றும் இருந்து, தங்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் க்ஷேமங்களையும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இதுதான் திருமலையில் கண்ணாடி ஹால் எனப்படும் அயன மஹாலில் நாள்தோறும் நடத்தப்படும் ஊஞ்சல் சேவையின் தாத்பரியமாகும். இந்தச் சேவை ஒவ்வொரு நாளும் மாலையில் ஆறு மணிக்குப் பிறகு நடந்து வருகிறது. உற்சவமூர்த்தி அழகாக அலங்கரிக்கப்பெற்ற ஊஞ்சலில் தம் தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். கந்தம், சாமர உபசாரங்கள், வேதபாராயணம், பஜனை ஆகியவற்றுடன் ஸ்வாமி லேசாக ஊஞ்சல் ஆடுகிறார்.

மேற்கண்ட ஊஞ்சல் சேவை உற்சவத்தில் பங்குகொள்ள விரும்பும் கிருகஸ்தர்கள் ரூ. 1000 செலுத்தித் தங்கள் குடும்பத்தில் ஆறு பேர்களுடன் இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளலாம். அவ்விதம் உற்சவத்தில் பங்குகொள்ளும் கிருகஸ்தருக்கு ரூ. 250 பெறுமானமுள்ள தங்க டாலரும் வஸ்திர வெகுமதியும் அளிக்கப்படும்.

எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

அன்புள்ளம் கொண்ட வாசகருக்கு,

கடவுளின் கிருபையை முன்னிட்டு எழுதுவது. வணக்கம். ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்திற்கு 62-ஆம் ஆண்டு நடந்துகொண்டிருக்கிறது.

வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். வாசக அன்பர்கள் தங்களின் தெய்விகக் கைங்கர்யமாக, தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் முயற்சி செய்யக் கோருகிறோம்.

—ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

சந்தா விவரம்

வருட சந்தா ரூ. 12 **ஆயுள் சந்தா ரூ. 150**

பெறுநர் :
ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.

அன்புடையீர்,
என்னை 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' பத்திரிகையின் ஒரு சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளக் கோருகிறேன்.
என் முகவரி :

இத்துடன் ரூ. 12. / ரூ. 150-ஐ செக். / M. O. மூலம் அனுப்பியுள்ளேன்.

கையொப்பம்

பெறுநர் :
ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

அன்புடையீர்,
என்னை 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' பத்திரிகையின் ஒரு சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளக் கோருகிறேன்.
என் முகவரி :

இத்துடன் ரூ. 12. / ரூ. 150-ஐ செக். / M. O. மூலம் அனுப்பியுள்ளேன்.

கையொப்பம்

பெறுநர் :
ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.

அன்புடையீர்,
என்னை 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' பத்திரிகையின் ஒரு சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளக் கோருகிறேன்.
என் முகவரி :

இத்துடன் ரூ. 12. / ரூ. 150-ஐ செக். / M. O. மூலம் அனுப்பியுள்ளேன்.

கையொப்பம்

பெறுநர் :
ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004.

அன்புடையீர்,
என்னை 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' பத்திரிகையின் ஒரு சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளக் கோருகிறேன்.
என் முகவரி :

இத்துடன் ரூ. 12. / ரூ. 150-ஐ செக். / M. O. மூலம் அனுப்பியுள்ளேன்.

கையொப்பம்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி 62 | பிப்ரவரி—1982 | இதழ் 2

பொருளடக்கம்

மூன்று நாள் அந்தர்யோகம்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 146 ஆவது ஜயந்தி விழா 1982 பிப்ரவரி 25-ஆம் நாள் வியாழக்கிழமை வழக்கம் போல் விமரிசையாக, சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் நடைபெறும்.

பிப்ரவரி 26 முதல் 28 தேதி வரை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் அந்தர்யோகமும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தியின் சிறப்பு விழா நிகழ்ச்சிகளும் நடைபெறும். மூன்று நாள் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் 'மேனேஜர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004' என்ற முகவரிக்கு முன்னதாகவே கடிதம் எழுதித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை.
—திருமூலர்

தொகுதி 62	துர்மதி ஹூ மாசி மீ	இதழ் 2

பிரார்த்தனை

नमस्ते सदा वत्सले मातृभूमे
त्वया हिन्दुभूमे सुखं वर्धितोऽहम् ।
महामङ्गले पुण्यभूमे त्वदर्थे
भवत्वेष कायो नमस्ते नमस्ते ॥

நமஸ்தே ஸதா வத்ஸலே மாத்ருபூமே
த்வயா ஹிந்துபூமே ஸுகம் வர்த்திதோஹம் ।
மஹாமங்கலே புண்யபூமே த்வதர்த்தே
பவத்வேஷ காயோ நமஸ்தே நமஸ்தே ॥

எப்பொழுதும் அன்பைப் பொழியும் தாய்நாடே! உன்னை நான் முப்பொழுதும் வணங்குகிறேன். ஹிந்துபூமியே! நீயே என்னைச் சுகமாக ஊட்டி வளர்க்கிறாய். மங்கல மயமான புண்யபூமியே! உனது பணிக்கென எனது இந்த உடல் அர்ப்பணமாகட்டும். உன்னை நான் மீண்டும் மீண்டும் வணங்குகிறேன்.

குருவுக்கும் குருவான சொரூபம் நீயே
குணதோடம் எவையுமிலாச் சொரூபம் நீயே
அருளுக்கும் அருளான சொரூபம் நீயே
அகளங்க மானபர சொரூபம் நீயே
தெரிவிக்கும் தெரிவான சொரூபம் நீயே
திருசியம் ஓரணுவுமிலாச் சொரூபம் நீயே
சுருதிக்கும் சொல்லவொணாச் சொரூபம் நீயே
சும்மாவே இருக்கின்ற சொரூபம் நீயே.

—ரிபு கீதை



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

ஞாயிறு, டிசம்பர் 9, 1883

பிற்பகல் சுமார் ஒன்று அல்லது இரண்டு மணி இருக்கும். குருதேவர் தமது அறையில் சிறிய கட்டிலில் அமர்ந்து பக்தர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

அதர், மனமோகன், கல்கத்தாவிலுள்ள டண்டணு என்ற பகுதியைச் சேர்ந்த சிவசந்திரன், ராக்கால், ம—, ஹரீஷ் மற்றும் பல அன்பர்கள் அறையில் அமர்ந்திருந்தனர். ஹாஸ்ராவும் அப்போது தட்சிணேசுவரக் கோவிலிலேயே வசித்து வந்தார்.

ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் மிகவும் உன்னத ஆன்மிக நிலையைக் குறித்து, குருதேவர் விவரித்துக்கொண்டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் (பக்தர்களிடம்): சைதன்யரின் மனம் மூன்று வித ஆன்மிக நிலைகளிலும் சஞ்சரித்தது. ஒன்று, புறவுலகத்தின் நினைவோடு இருந்த (பிரக்ஞை) நிலை. இந்த நிலையில் அவரது மனம் ஸ்தூலத்திலும் சூட்சுமத்திலும் தங்கியிருந்தது. இரண்டாவது, பாதி புறவுலகத்தின் நினைவோடு இருந்த நிலை (அரைப் பிரக்ஞை நிலை). இந்த நிலையில் அவரது மனம் காரண சரீரத்தில் நுழைந்தும் தெய்விகப் பேரின்பத்தில் அழுந்தியும் இருந்தது. மூன்றாவது, உள்ளுணர்வு மட்டும் இருந்த நிலை. இந்த நிலையில் அவரது மனம் மகா காரணத்தில் லயித்து ஒன்றியிருந்தது.

ஸ்ரீசைதன்யரின் இந்த மூன்று நிலைகளும் வேதாந்தம் குறிப்பிடும் பஞ்சகோசங்களுடன் நன்கு பொருந்துகின்றன. ஸ்தூல சரீரம் என்பது, அன்னமய கோசத்தையும் பிராணமய கோசத்தையும் குறிப்பிடுகிறது. சூட்சும சரீரம் என்பது, மனோமய கோசத்தையும் விஞ்ஞானமய கோசத்தையும் குறிப்பிடுகிறது. காரண சரீரம் என்பது, ஆனந்தமய கோசத்தைக் குறிக்கும். மகா காரணம் என்பது பஞ்ச கோசங்களையும் கடந்து அப்பாற்பட்டிருக்கிறது.

ஸ்ரீசைதன்யரின் மனம் மகாகாரணத்தில் லயித்து ஒன்றிவிடும்போது அவர் சமாதி நிலைக்குச் சென்றுவிடுவார். இதுவே நிர்விகல்ப சமாதி அல்லது ஜடசமாதி என்று சொல்லப்படுகிறது.

வெளியுலக நினைவு இருக்கும் போது சைதன்யர் நாமசங்கீர்த்தனம் செய்வார். பாதிப் பிரக்ஞை நிலையில் இருக்கும்போது அவர் பக்தர்களுடன் சேர்ந்து ஆடுவார். ஆழ்ந்த உள்ளுணர்வு நிலையில் அவர் சமாதியில் மூழ்கித் தோய்ந்திருப்பார்.

ம — (தமக்குள்): குருதேவர் தமது சொந்த மனநிலைகளையே இவ்விதம் குறிப்பாகக் கூறுகிறாரா? சைதன்யரும் இத்தகைய நிலைகளைப் பெற்றிருந்தார் என்று சொல்கிறாரா? சைதன்யருக்கும் குருதேவருக்கும் மிகுந்த ஒற்றுமை இருக்கிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர்: சைதன்யர் பகவத் பிரேமையின் அவதாரமாவார். மக்களுக்குப் பக்தியைப் போதிப்பதற்காகவே அவர்

மண்ணுலகில் அவதரித்தார். ஒருவனுக்கு ஆண்டவனிடம் பக்தி ஏற்பட்டுவிடுமானால் அவனுக்கு எல்லாமே கிடைத்த மாதிரிதான்; அவன் அனைத்தையும் பெறுகிறான். மற்றப்படி ஹடயோகம் பழக வேண்டும் என்றெல்லாம் எந்த அவசியமும் இல்லை.

ஒரு பக்தர்: சுவாமி, ஹடயோகம் என்பது எப்படிப்பட்டது?

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஹடயோகம் பயிலும் ஒருவன் தனது உடலைப்பற்றியே மிகவும் சிந்திக்கிறான். அவன் தனது மலவாயின் வழியாக ஒரு சிறிய மூங்கிற் குழாயைச் செலுத்தித் தன் குடல்களைக் கழுவிச் சுத்தம் செய்கிறான்; ஆண்குறி வழியாகப் பால், நெய் ஆகியவற்றை உள்ளுக்குள் இழுக்கிறான். நாக்கு-சுத்தியைப் பழகுகிறான்.* ஏதாவது ஓர் ஆசனம் போட்டு உட்காருவான்; அப்படியே உடலை அந்தரத்தில் நிறுத்துவான். இவையெல்லாம் பிராணனின் செயல்களாகும். ஒரு மந்திரவாதி ஜாலவித்தையைக் காட்டிக்கொண்டிருந்தபோது அவனுடைய நாக்கு, தொண்டைப் பக்கம் மேல்நோக்கி வளைந்து ஒட்டிக்கொண்டது. அது காரணமாக உடனே அவனது உடல் அசைவற்று நின்றுவிட்டது. அவனது அந்த நிலையைக் கண்ட மக்கள் அவன் இறந்து போய்விட்டான் என்றே முடிவு செய்து அவனைப் புதைத்துவிட்டனர். பல வருஷங்களாக அவன் மண்ணில் புதைந்து கிடந்தான். நீண்ட காலத்திற்குப் பிறகு அந்த மண் எப்படியோ சிறிது நீக்கப்பட்டபோது அந்த ஜாலவித்தைக்காரனுக்குத் திடீரென்று உணர்வு திரும்பியது. உணர்வு திரும்பியதுமே அவன், ''மாயம் பார்! மந்திரம் பார்! குழப்பமெல்லாம் வருது பார்! பார்!'' என்று உடனே கத்த ஆரம்பித்துவிட்டான். (எல்லோரும் சிரித்தனர்.) இவையெல்லாம் பிராணனின் செயல்களாகும்.

வேதாந்திகள் ஹடயோக முறைகளை ஏற்றுக்கொள்வதில்லை. ராஜயோகம் என்றும் ஒன்று இருக்கிறது. ராஜயோகத்தில் மனதின் மூலம் யோகம், அதாவது ஆண்டவனைச் சேர்தல், ஏற்படுகிறது; இந்த முறையில், பக்தியின் மூலமும் ஞானவிசாரத்தின் மூலமும் யோகம் ஏற்படுகிறது. இந்த ராஜயோகமே சிறந்தது. ஹடயோகம் நல்லதல்ல. கலியுகத்தில் மனிதனின் வாழ்க்கை உணவைச் சார்ந்து அன்னகத-பிராணனாக† இருக்கிறது.

ஸ்ரீராமகிருஷ்ணர் பஞ்சவடியிலிருந்து நஹபத் கட்டிடத்தை நோக்கி வரும் சாலையில் நின்றுகொண்டிருந்தார். குருதேவர் பைன் மரங்கள் அடர்ந்திருந்த பக்கம் சென்றார். பின்பு சிறிது நேரத்தில் அவர் முகம் கழுவிக்கொண்டு தமது அறையை நோக்கித் திரும்பிச் சென்றுகொண்டிருந்தார். அப்போது நஹபத்தில் வேலிக்குப் பின்னால் இருந்த வராந்தாவின் ஒரு பக்கமாக உட்கார்ந்துகொண்டு ம— ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்ததை ஸ்ரீராமகிருஷ்ணர் கவனித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: ஓ! நீ இங்கே இருக்கிறாயா? மிகவும் விரைவிலேயே உனக்கு ஆன்மிகப் பயன் கிடைக்கும். நீ சிறிதளவு முயற்சி செய்து ஆத்மசாதனம் பழகினால் போதும், உடனே யாரோ ஒருவர் வந்து, 'இப்படி இப்படிச் செய்' என்று உனது ஆன்மிக முன்னேற்றத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவார்.

தியானத்தில் இருந்த ம— திடுக்கிட்டுக் குருதேவரை நிமிர்ந்து பார்த்தார். குருதேவரைப் பார்த்தபடியே அவர் அமர்ந்திருந்தார். அப்போதும் இருந்த இடத்தை விட்டு ம— எழவில்லை.

---

* நாக்கு சுத்தி—வாய்வழியாகத் துணியைச் செலுத்திப் பிறகு சற்று நேரத்திற்குப் பிறகு வெளியே எடுப்பார்கள். அவ்விதம் துணி வெளியே எடுக்கப்படும்போது குடலில் உள்ள அழுக்குகளோடு வெளியே வரும். குடலிலுள்ள அழுக்கை நீக்கும்பொருட்டு ஹடயோகிகள் இதைச் செய்வது வழக்கம்,

† ''உயிரானது கிருதயுகத்தில் எலும்புகளைப் பற்றி இருந்தது; திரேதாயுகத்தில் மாமிசத்தைப் பற்றி இருந்தது; துவாபர யுகத்தில் இரத்தத்தைப் பற்றி இருந்தது; கலியுகத்தில் அன்னத்தைப் பற்றி இருக்கிறது'' என்று ஸ்மிருதிமுக்தாபலம் என்ற நூல் கூறுகிறது. அந்த ச்லோகம் வருமாறு:

க்ருதே த்வஸ்திகதா: ப்ராணா:.
த்ரேதாயாம் மாம்ஸமாச்ரிதா: ।
த்வாபரே ருதிரே சைவ, கலௌ த்வன்னாதிஷு ஸ்திதா: ॥

ஸ்ரீராமகிருஷ்ணர்: உனக்கேற்ற சரியான காலம் கூடிவிட்டது. தாய்ப்பறவை முட்டையின் ஓட்டை உடைப்பதற்கு உரிய தகுந்த நேரம் வராத வரையில் அது முட்டையின் மேலோட்டை உடைக்காது. உன் லட்சியம் என்று நான் உனக்கு என்ன சொல்லியிருக்கிறேனே அதுவே உன் லட்சிய மாகும்.

இவ்விதம் சொல்லிவிட்டு ஸ்ரீராமகிருஷ்ணர் மீண்டும் ம—வுக்கு அவரது ஆன்மிக லட்சியம் இன்னது என்று எடுத்துச் சொன்னர்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: எல்லோருமே கடுமையாகத் தவம் பழக வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் நான் மிகவும் கஷ்டப்பட்டுத் தவம் பழகினேன். மண்மேட்டைத் தலையணையாகக் கொண்டு, அதன் மீது தலை சாய்த்துக்கொண்டே நான் தரையில் விழுந்து கிடப்பேன். அப்போது நாட்கள் எப்படிக் கழிந்தன என்பதே எனக்குத் தெரியாது. ''அம்மா! அம்மா!'' என்று மட்டும் சொல்லிக்கொண்டே ஜகன்மாதாவை அழைத்து, அழுது புலம்பினேன்.

கடந்த இரண்டு வருஷங்களாக ம — குருதேவரிடம் வந்துகொண்டிருந்தார். ம — ஆங்கிலம் படித்தவர். சில சமயங்களில் ஸ்ரீராமகிருஷ்ணர் ம — வை 'இங்கிலீஷ் காரன்' என்று அழைப்பது வழக்கம். ம — கல்லூரியில் படித்தவர். அத்துடன் அவருக்குத் திருமணமும் ஆகியிருந்தது.

கேசவசந்திர சேன், மற்றும் அந்நாளில் இருந்த அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ம—வுக்குப் பெரிதும் விருப்பம் இருந்தது. மேலும், ஆங்கிலேயர் வழியில் கல்வி கற்ற அவருக்கு மேலைநாட்டுத் தத்துவம், மேலைநாட்டு விஞ்ஞானம் ஆகியவை பற்றிய ஆங்கில நூல்களைப் படிப்பதிலும் ஓர் அபிமானம் இருந்தது. ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அவர் வர ஆரம்பித்ததிலிருந்து ஐரோப்பிய அறிஞர்களின் நூல்களிலும் ஆங்கிலம், மற்றும் பிறமொழிகளில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளிலும் அவருக்கு விருப்பம் இல்லாமற் போய்விட்டது. இப்போது அவர் இரவு பகலாகக் குருதேவரைத் தொடர்ந்து தரிசித்துக்கொண்டிருப்பதிலும், அவரது திருவாக்கிலிருந்து பொழியும் அமுத மொழிகளைக் கேட்டுக்கொண்டிருப்பதிலுமே விருப்பம் கொண்டிருந்தார்.

இப்போதெல்லாம் ம — ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களை மட்டுமே சதாகாலமும் சிந்திப்பதில் ஈடுபட்டிருந்தார். குருதேவர், 'ஒருவன் ஆத்மசாதனை பழகுவதன் மூலம் நிச்சயம் பகவானைத் தரிசிக்க முடியும்' என்றும், 'மனிதப் பிறவியின் ஒரே ஒரு லட்சியம் கடவுள் சாட்சாத்காரம்தான்' என்றும் கூறியிருந்தார். □

கண்ணுக்கும் காதுக்கும் என்ன வித்தியாசம்?

தங்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதற்காக மூன்று பேர் ஒரு ஞானியை அடைந்தார்கள். ஞானி அவர்களைப் பார்த்து, ''கண்ணுக்கும் காதுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?'' என்று கேட்டார்.

முதல் ஆள், ''ஐந்து அங்குலம்'' என்றுன். இரண்டாவது ஆள், ''காதால் கேட்பதைவிடக் கண்ணுல் பார்ப்பதைத்தான் உலகில் ஜனங்கள் நம்புகிருர்கள். அதுதான் வித்தியாசம்'' என்றுன். மூன்ருவது ஆள், ''கண்ணைவிடக் காதுதான் உயர்ந்தது. ஏனென்ருல் கண்ணுல் எதிரே உள்ள வஸ்துக்களைத்தான் பார்க்க முடியும். ஆனுல் காதால், தத்துவார்த்தம் பொருந்திய எத்தனையோ விஷயங்களைக் கேட்க முடியும்'' என்றுன்.

ஞானி முதல்வனைச் சிஷ்யனுக ஏற்க மறுத்தார். இரண்டாவது ஆளுக்குக் கடவுளை வழிபடும் வழியைச் சொல்லிக் கொடுத்தார். மூன்ருவது ஆளுக்கோ பிரம்மஞானத்தை உபதேசித்தார்.

பக்திக்கு அளவுகோல்

சுவாமி தபஸ்யானந்தர்

சுவாமி தபஸ்யானந்தரின் ஆங்கிலச் சொற்பொழிவின் ஒரு பகுதி இங்கே இடம் பெறுகிறது.

புராணம் என்றால் என்ன, அவற்றின் உள்ளடக்கம் எவை என்று ஆராயும்போது நமது மதக் கோட்பாடுகளையும் விதிமுறைகளையும் புராணங்கள் கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

புராணங்கள் இலக்கியங்கள் என்ற தவறான கருத்து நிலவி வருகிறது. புராணங்கள் தோன்றக் காரணமாக இருந்தவை வேதங்களே. கால மாறுதல்களுக்கிடையே, காலப் போக்கில் மனித மன வளர்ச்சி ஏற்பட ஏற்பட, கருத்துக்கள் மாறின. அவசியம் காரணமாக, கால மாறுதலுக்கேற்பப் புராணங்கள் பெருகின.

கடலை அடைந்த பின்பும், கடலில் சிறிது தூரம் வரையில் தன் தன்மையைக் கங்கை வைத்திருப்பது போல், பல மாறுதலுக்கிடையிலும், வேத, உபநிஷதங்கள் தம் தனித்தன்மையை மாறாமல் வைத்துக் கொண்டிருக்கின்றன. மின்சாரத்தை எடுத்துக்கொண்டோமானால் நாம் அதைத் தொட முடியாது; ஆனால் அதைப் பயன் படுத்தலாம். அது போலவே உபநிஷதக் கருத்துக்களை நாம் கடைப்பிடிக்கக் கூடிய விதத்தில், நமக்குப் பயன் தரத் தக்க விதத்தில் தருபவை புராணங்களாகும்.

புராணங்கள் நமக்குக் கதை சொல்லி முடித்த பின், அவற்றின் உட்பொருளாகிய விவேகம், வைராக்கியம், பக்தி, பற்றற்ற தன்மை ஆகிய பண்புகளை நமக்குத் தருகின்றன. பல விஷயங்கள் கலந்திருந்தாலும், 'இறைவனே நம் விதியின் தலைவன், இறைவனே நடத்துபவன், அவனை அடைவதே நமது லட்சியம்' என்று புராணங்கள் வலியுறுத்துகின்றனவே தவிர, கதையையும் கதாபாத்திரங்களையும் நிலைநாட்டுவதில்லை.

இத்தகைய புராணங்கள் பதினெட்டில் சிறந்தனவாகக் கருதப்படுபவை பாகவதமும் விஷ்ணுபுராணமும் ஆகும். பாகவதம் பகவானின் பெருமையைக் கூறுகிறது.

பாமரர்களும், தத்துவ நுட்பங்களை அதிகம் உணராதவர்களும்கூட உணர்ந்து, கடைப் பிடிக்கக் கூடிய விதத்தில் பாகவதம் அமைந்திருக்கிறது. பக்தன் என்றால் யார், பக்தி என்றால் என்ன, பக்தி என்ற பயிரை நம் உள்ளத்தில் எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பவற்றை ஒன்பது படித்தரங்களில் பாகவதம் விளக்கித் தருகிறது.

முதலில் ச்ரவணம். ச்ரவணம் என்றால், ஸத்விஷயங்களைக் கேட்பது. கேட்பதன் மூலம் அறிவை வளர்க்கலாம். ஆனால் கேட்டதன் பயனை அடைய, கேட்ட விஷயங்களின் கருத்தை நம் மயமாக்க, நமக்கு விஷயத்தைத் தருபவர்கள், ஸத்புருஷர்களாக, அநுபூதிமான்களாக இருக்க வேண்டும். ரிஷி சுகர்மூலம் பரீக்ஷித் மன்னன் கேட்டபோது, ஆற்றல் மிகுந்த அவரது சொற்கள் நேராக அவனது இதயத்தைத் தொடுகின்றன. பகவானே கபிலாவதாரத்தில் சொல்கிறார், ''என்னைப்பற்றிப் பாகவதத்தில் ரிஷிகள் வாயிலாகக் கேட்க வேண்டும்'' என்று.

சிரத்தை—ஒரு கருத்தை நம் மனதில் பதிய வைத்து நம்மை அதனிடம் செலுத்துவதே சிரத்தை எனப்படுகிறது. பள்ளியில் மாணவனுக்கு இலக்கணம் படிக்கும்போது கஷ்டமாகத் தோன்றுகிறது. பள்ளியின் ஒழுங்கு விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் சிரமமாக இருக்கிறது. ஆனால் சிரத்தையுடன் பின்பற்றி வரும்போது சிறந்த மாணவன் ஆகிறான்.

இது போலவே சிரத்தையுடன் பக்தி பண்ணும்போது (யாரும் நம்மைக் கட்டாயப் படுத்துவதில்லை) ஆரம்பத்தில் சிரமமாகத் தோன்றினாலும், போகப் போக அதில் ருசி காண்கிறோம். இதயபூர்வமாக அனுபவிக்க ஆரம்பிக்கிறோம். நாமே சுவைத்து அனுபவித்து இன்பம் காண்கிறோம். இது தொடர்ந்ததாக, இடையில்லாததாக ஆகும் போது, கங்கை எவ்வாறு வழியில் ஏற்படும் இடையூறுகளை எல்லாம் தன்னுள் இழுத்துக் கொண்டு செல்கிறதோ, அது போல நமது சிரத்தையினால் உறுதியுடன், ஆர்வத்துடன் இறைவனிடம் நம்மை எடுத்துச் செல்கிறது.

பாகவதத்தில் மனதின் வர்ணனை மிகவும் அழகாகத் தரப்பட்டிருக்கிறது. ''என் இதயம் உனக்காக ஏங்குகிறது. தாய்ப் பறவை வெளியே சென்றிருக்கும்போது, குஞ்சுகள் தாயின் வரவிற்காக ஆவலுடன் காத்திருப்பது போல, தாயிடம் பால் அருந்தக் காத்திருக்கும் கன்றைப் போல, வெளியூர் சென்றிருக்கும் கணவனது வரவிற்



காகக் காத்திருக்கும் மனைவி போல, என் மனம் உனக்காக ஏங்கிக் காத்திருக்கிறது'' என்று ருத்ராகாசன் வாயிலாகச் சொல்கிறது. 'உலகப் பொருள்களில் இந்திரியங்கள் எப்போதும் செல்வது போன்று, என் மனம் உன்னையே சதா நோக்கிச் செல்லட்டும்' என்ற பக்தியோடு கூடிய பிரார்த்தனையும் பாகவதத்தில் தரப்பட்டிருக்கிறது.

கீர்த்தனம் — இறைவனது பெருமையைப் பாடுவதே வாய் படைத்ததற்குப் பயன். இதைக் கூட்டு வழிபாடாகவும் தனியாகவும் செய்யலாம். இறைவனைப் பற்றிப் பாடுவதைச் சிலர், இறைவனை முகஸ்துதி பண்ணுவதாகும் என்று சொல்லுகிறார்கள். இறைவனைப் பாடுவது நம்மை நாமே உயர்த்திக் கொள்ளவும், பண்படுத்திக் கொள்ளவுமே தவிர, இறைவனுக்கு நம் புகழ்ச்சி தேவையில்லை. இறைவனை உணர்ந்து பாடப் பாட நாம் பண்பில் மேலோர் ஆகிறோம்.

ஸ்மரணம் — இடையறாமல் நம் மனதை இறைச் சிந்தனையில் நிலைத்திருக்கச் செய்வதே ஸ்மரணம். இறைச் சிந்தனை வாழ்விற்கு மிகவும் அவசியமானது. இறைவனுக்கே வாழ்வில் முக்கியத்துவம் அளிக்கும் போதுதான், இறைச் சிந்தனை நம்முள் மேலோங்கி நிலைத்திருக்கும். கடலின் மேல் மட்டத்தில் அலைகள் இருந்தாலும், அடித் தளம் அமைதியுற்று இருப்பது போல, மனம் உலகத்தோடு தொடர்பு கொண்டிருந்தாலும், அகத்தில் இறைச் சிந்தனை நிறைந்திருக்க வேண்டும்.

இறைநாமத்தை இடையறாமல் ஸ்மரிக்க உதவும் என்பதற்காக, இறைவனுக்கு எண்ணற்ற நாமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏன் இத்தனை நாமங்கள்? ஒவ்வொரு நாமமும் இறைவனின் குணத்தை, தன்மையை விளக்குவதாக இருக்கிறது. பக்தன் தன் இயல்புக்கேற்ப, தன் ருசிக்கேற்ப உள்ள நாமத்தை எடுத்துக்கொள்கிறான். ஒரே நாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதை விட, பல நாமத்தை ஓதுவது சிலருக்கு இன்பம் தருகிறது. சிலர் ஒரே நாமத்தை எப்போதும் ஜபித்துக் கொண்டிருப்பார்கள். அடிக்கப்பட்ட முளையில் கட்டப்பட்ட பசுப் போல, மனதிற்குள்ளேயே அந்தர்முகமாக ஓதுவதனால், மனம் எங்கும் சுற்றாமல் பகவந் நாமத்தையே சுற்றி வரும். சிரத்தையோடு ஸ்மரிக்கும்போது நாம் இறைவனின் அருகில் செல்கிறோம்.

நம் மனம் சிறு குழந்தையைப் போன்றது. குழந்தை விளையாட்டில் ஈடுபடும்போது, தீவிரமான கவனத்துடன் விளையாடுகிறது. நம் மனமும் வெளியுலகில் முழு மூச்சுடன் ஈடுபடுகிறது. அதற்கு அந்தர்முகமாக

எதையும் பற்றிப் பிடிக்க இயலாதபோது, புறத்திலிருந்து நாமத்தைக் கொடுத்தோமானுல், (யானைக்குச் சங்கிலியைக் கொடுப்பதுபோல) அதைப் பிடித்துக்கொள்கிறது. மனதிற்கு இன்பம் கொடுப்பதாக இருந்தால், அந்த நாமத்தை விடாமல் பற்றிக்கொள்கிறது.

இடையருமல் ஏன் ஜபிக்க வேண்டும் என்ற சந்தேகம் எழுகிறது. ஆங்கிலப் பாட வகுப்பில், ஆசிரியர் ஆங்கிலப் பாடலொன்றை வாசிக்கும்போது, அதில் மூன்று தரம் சொல்லப்பட்டிருக்கிற 'half a league' என்பதை மூன்று தரம் வாசித்தபோது, மாணவன் கேட்கிறுன், "ஏன் ஸார்? மூன்று தரம் half a league என்று சொல்வதற்குப் பதிலாக '$1\frac{1}{2}$ league' என்று சொல்லலாமே?" என்று. ஏன் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும் என்ருல், ஆட்டிடையனின் நாய் வழிவிலகிச் செல்லும் ஆட்டை வழிக்குக் கொண்டு வருவது போல், நம் அலையும் மனதையும் ஜபம் ஒருமுகப்படுத்துகிறது.

எத்தனை தரம் சொன்னோம் என்பது முக்கியமல்ல; எவ்வாறு சொன்னோம் என்பது தான் முக்கியம். யாவற்றையும் சாதிக்க வல்லது ஆண்டவனின் திருநாமம் என்ற உணர்வு வேண்டும்.

கிருஷ்ணனது பிறந்ததின விழாவில் துலாபாரம் நடைபெற்றது. இறைவனைவிட இறை நாமமே ஆற்றல் உள்ளது என உணர்ந்த ருக்மிணி, இறைவனது நாமத்தை ஓதித் துளசிதளத்தைத் தராசுத் தட்டில் இட, பகவான் வீற்றிருந்த தட்டு மேலேயுள்ள கோலைத் தொட்டது.

இறைவனை நோக்கி மனதை உள்முகமாகத் திருப்ப, தியானம் தேவை. ஸ்மரணையில் ஜபம், தியானம் எல்லாம் அடங்குகிறது. பக்தி மார்க்கத்தில் பரீக்ஷித் ஸ்மரணையினுலேயே முக்தி அடைந்தாலும், இந்த ஒன்பது தன்மைகளும் ஒன்றையொன்று பற்றியே இருக்கின்றன. ஒவ்வொன்றும் தன் மட்டில் முழுவதாக முக்தி தரவல்லதாக இருந்தாலும், ஒன்பதும் தொடர்புள்ளவையாக இருக்கின்றன.

பாதஸேவனம்—நம்மில் சிலர், பகவானின் திருப்பாதங்களை வணங்கி அத்துடன் விட்டுவிடுவதே பாதஸேவை என்று கொள்கிருேம். இறைவனின் பாதங்களைப் பற்றிப் பிடிப்பது தான் குறிக்கோள். பாதஸேவை என்ருல், ஜாக்ரத் ஸ்வப்னம் ஸுஷுப்தி துரியம் ஆகிய நான்கு படித்தரங்களிலும் இறைவனிடம் செய்யப்படுவதே என்று பழமறைகள் கூறுகின்றன.

இந்த நான்கு நிலைகளும் இறைவனின் நான்கு பாதங்கள் என்று சொல்லப்படுகின்றன. சேவை செய்யும் மனப்பான்மை கிறிஸ்தவ மதத்திலிருந்தே வந்துள்ளது, இந்துக்களிடம் இல்லை என்றும் சிலர் கூறுகின்றனர். கோவிலிலுள்ள இறைவனுக்குப் பாதசேவை செய்தால் ஜீவன்களிடமும் வியாபித்துள்ள இறைவன் மூலம் நரசேவை, பாதசேவை செய்வதே ஆகும். மனிதன் தனித்து இயங்குவதைவிடக் கூட்டுமுயற்சியாக வாழ்வதற்கு, இக்காலத்தில் ஒருவருக்கொருவர் செய்யும் உதவி சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டு பாதசேவையாம்.

அர்ச்சனம்—மற்ற மதங்களில் இல்லாத சிறப்பான வழிபடும் முறை இது. ஒரு விக்கிரகத்தையோ படத்தையோ பார்க்கும்போது, அதில் இறைவன் நிறைந்திருக்கிறுன், வியாபித்திருக்கிறுன் என்ற திட நம்பிக்கை நம்முள் எழ வேண்டும். ஒரு மானிட உடலில் எல்லாக் குணங்களும் நிறைந்திருப்பதைப் பார்ப்பது போல, கடவுளை உருவமுள்ளவனுக, ஆற்றல்கள் நிறைந்தவனுகப் பார்க்கிருேம். உருவத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைத்தான் வழிபடுகிருேமே தவிர, அந்த உருவத்தை அல்ல. இவ்வாறு மனதிற்குப் பயிற்சி கொடுத்துப் பழகி வந்தோமானுல், சகுணத்திலிருந்து நிர்க்குணத்திற்குச் செல்வது சுலபம்.

குருதேவர் கோவிலில் காளிமாதாவின் சிலையைக் காணவில்லை. ஈச்வர சாந்நித்

யத்தையே கண்டார். ''அம்மா பேசுகிருள்'' என்று சொல்லுகிருர். இது கதை என்று சொல்லிவிட முடியாது. இந்த மனப் பான்மையைப் பக்தி உணர்வுடன் பார்க்கும் போதுதான் நம்பிக்கை ஏற்படும்.

குருதேவரின் சீடரான சுவாமி ராமகிருஷ்ணனந்தரிடம் மாணிக்கசாமி முதலியார் என்ற அன்பர் நட்புக் கொண்டிருந்தார். அவர் அத்வைதி. ராமகிருஷ்ணனந்தரிடம் சத்விஷயங்களை அவர் ஆத்திரத்துடன் விவாதிப்பது வழக்கம். ஒரு நாள் மாலையில் மடத்திலிருந்து அவர் புறப்பட்டபொழுது சுவாமி ராமகிருஷ்ணனந்தர், ''குருதேவர் டிபன் சாப்பிடுகிருர். தாங்களும் சிறிது இருந்து, டிபன் உண்டு செல்லலாமே!'' என்ருர். அதற்கு அவர், "I am ready to take tiffin, not your doctrines—டிபனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்; ஆனல் தங்கள் கொள்கையையல்ல'' என்று பதில் அளித்தார்.

குருதேவர் சாப்பிடவில்லை என்று எப்படித் தெரியும்? பக்தனின் கண்ணுக்கு, பக்தி சிரத்தையோடு, நம்பிக்கையோடு பார்க்கும் கண்ணுக்குத் தெரியும்.

சுவாமி விவேகானந்தர் இளமைப் பருவத்தில் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர். கோவிலுக்கு வரமாட்டார். தந்தையாரின் மறைவுக்குப் பின்பு வறுமையினல் வாடினலும், பிரபுத்வம் நிறைந்த அவரது சுபாவத்தினல், யாரிடமும் அவர் தமது வறுமையைச் சொல்லிக்கொள்ள முடியவில்லை. இதைக் கண்ட குருதேவர், ''அம்மாவிடம் நம்பிக்கை இல்லாததனல்தான் கஷ்டப்படுகிருய். கோவிலில் வந்து பிரார்த்தனை செய்'' என்று சொல்கிருர். கோவிலில், நரேந்திரர் பவதாரிணியின் சிலையைக் காணவில்லை. சின்மயியாக, கடவுள்தன்மை நிறைந்தவளாக, எங்கும் வியாபித்திருப்பவளாக அவர் தேவியைக் கண்டார். அறிவுக் கண் திறந்தவர்கள் தேவியைக் கண்டார்கள். அறிவுக் கண் திறக்கப்படாத நாம் அத்தகைய சான்ருேர்களைப் பின்பற்றுவோம்.

இறைவனை மலர் கனி புனிதநீர் கொண்டு வழிபடலாம் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. நமது அர்ப்பணங்களுக்கு ஓர் அர்த்தம் உண்டு. பாரோமீட்டரைக் கொண்டு ஏற்றத்தாழ்வை அளப்பது போல, நமது அர்ப்பணங்கள் நம் பக்தியின் தரத்தை உணர்த்துகின்றன. நமது பக்தி, நசிகேதனின் தந்தையின் பக்தியை ஒத்ததா அல்லது குசேலர் கொண்டு சென்ற அவலை ஒத்ததா என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பணக்காரன் ஒருவன் ஆடம்பரமாக வழிபாடு செய்யும்போது, அவன் என்ன கொடுத்தான் என்பதைவிட, எதைத் தன்னிடம் வைத்துக்கொள்கிருன் என்பதை இறைவன் பார்க்கிருன்.

வழிபாட்டில் நிறையக் கொடுத்துப் பழக வேண்டும். எவ்வளவு கொடுத்தோம் என்பதைவிட, அதன் பின்னுள்ள பக்தியின் தன்மை எத்தகையது என்பதுதான் முக்கியம். தியாக மனப்பான்மை கூடும் போதுதான் சேவை தோன்றுகிறது.

இவற்றையோ அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றையோ சிரத்தையோடு, பக்தியோடு, நம்பிக்கையோடு ஏற்று, அவற்றை நம் வாழ்வின் நடைமுறையில் பயின்று, இறைவனின் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக!

திரட்டும் தமிழும் : தேவி ராஜேச்வரி

காரணமில்லாமல் எனக்குத் தீங்கிழைப்பவனுக்கும் என்னலாகிய நன்மையே செய்வேன்; ஒருசிறிதும் அவனை வெறுக்கமாட்டேன். வெறுப்பை வெறுப்பினல் வெற்றி கொள்ள முடியாது; அன்பினலேயே வெற்றி கொள்ள இயலும். —புத்தர்

எங்கும் பரவி நிற்கும் மெய்ப்பொருளைக் காண வேண்டுமானல், சிருஷ்டியில் அடங்கிய ஈனப் பிராணிகளையும் தன்னுடையதைப் போலவே பேணும் அன்பைப் பெற வேண்டும். இந்த அன்பைத் தன் உள்ளத்தில் காணும் ஒருவன் தெய்வத்தை நேருக்கு நேரே கண்டவன். —காந்தியடிகள்

கண்டத்து ஒளி

கி. வா. ஜகந்நாதன்

இறைவனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கிருர் காரைக்கால் அம்மையார். அவருடைய நீலகண்டத்தைத் தரிசித்து அது பற்றிய வினவை விடுக்கிருர். இறைவனுடைய நீலகண்டத்தில் ஈடுபடுகிறவர் அவர் என்பதைப் பல முறை பார்த்திருக்கிருேம்.

இப்போது அதைப்பற்றியே கேட்கிருர். ''இறைவனே, இதை எமக்கு அருளிச் செய்ய வேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொள்கிருர்.

அருள் எமக்கு.

இறைவனை விளித்து இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிருர். அவன் நல்லன எல்லாவற்றையும் உடையவன்.

''நன்றுடையானைத் தீயதில்லானை'' என்பது சம்பந்தர் திருவாக்கு. ஆகவே அவனை,

நன்று உடையாய்!

என்று விளிக்கிருர்.

இறைவன் தன்னுடைய செந்நிறம் பெற்ற சடாபாரத்தில் சந்திரனை அணிந்திருக்கிருர். அது பிறையாதலின் மாசுமறுவின்றி ஒளிர்கிறது. இறைவனுடைய திருச்சடையாகிய பாதுகாப்பான இடத்தில் இருப்பதனுல் அது நன்ருக விளங்கித் தோன்றுகிறது. அது ஒளிவீசி இலங்கும்படி தன் செஞ்சடை மேல் அதைப் புனைந்திருக்கிருன். அந்தச் சந்திர சேகரனிடம் தம் விண்ணப்பத்தைச் சொல்கிருர்.

செஞ்சடைமேல், நக்கு இலங்க வெண்மதியம் ஒன்று உடையாய்!

'உன்னுடைய திருக்கழுத்தில் நஞ்சை வைத்திருக்கிருய். அது நீல வண்ணமுள்ள ஒளியுடன் அங்கே இலங்குகிறது. அதற்கு நான் எதை உவமை சொல்லட்டும்?' என்று சொல்கிருர்.

கண்டத்து ஒளி.

ஒளிபடைத்த திருமேனியை உடைய சிவபெருமானிடம் இருப்பதனுல் அந்த நஞ்சும் ஒளியுடையதாக இருக்கிறது. அதன் ஒளியைப் பார்த்து, அதற்கு எதை உவமை சொல்லலாம் என்று யோசிக்கிருர் அம்மையார்.

''இராநீர் இருண்டனைய கண்டத்தீர்'' (22)

''இருள் போந்து இடம் கொண்டிருக்கின்றது ஒக்கும்'' (35)

''மற்றவற்கு வீங்கிருளே போலும் மிடறு'' (65)

என்று அதற்கு இருளை உவமையாக்கி முன்பு சொன்னர்.

இப்போதும் அதையே முதலில் நினைக்கிருர்; 'இந்தக் கண்டத்தின் நிறத்தை இருளின் உருவென்று சொல்லட்டுமா?' என்று தொடங்குகிருர்.

இருளின் உரு என்கோ?

'இருளைச் சொல்வது அவ்வளவு சிறப்பன்று. இருள் எல்லாவற்றையும் தனக்குள் மறைத்துக் கொள்வது; அறியாமைக்கு உவமையாவது. அதைச் சொல்லலாமா?' என்ற எண்ணம் தோன்றுகிறது. 'கரியதாகவும் இருக்க வேண்டும்; பார்க்கக் குளிர்ச்சியாகவும் இருக்க வேண்டும்; நலம் பயப்பதாகவும் இருக்க வேண்டும். அப்படி உள்ள பொருள் எது?' என்று யோசிக்கிருர். அவருடைய உள்ளத்தில் மேகம் வந்து நிற்கிறது. அதையே சொல்லலாமா என்று நினைக்கிருர்.

மா மேகம் என்கோ?

'இருளுக்கும் மேகத்துக்கும் ஒளி ஏது? இறைவனுடைய கண்டம் ஒளியுடன் விளங்குகிறதே; நீலமாகவும் ஒளியுடைய தாகவும் ஒரு பொருள் இருந்தால் அதைத் தான் சொல்ல வேண்டும்' என்ற எண்ணம் பிறகு உண்டாகிறது. 'இது என்ன?' என்று மயங்கி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லாமல், பளிச்சென்று தெரியும் நீல மணியைச் சொல்வதுதான் பொருத்தம் என்ற எண்ணம் எழுகிறது. உடனே,

மருள் இல் மணிநீலம் என்கோ?

என்கிறார்.



'இப்படி நாம் உவமையைத் தேடித் தடுமாறுவானேன்? எம் பெருமானிடமே இந்தச் சந்தேகத்தைக் கேட்டுவிடலாமே!' என்ற எண்ணம் அடுத்தபடி தோன்றுகிறது. ஆகவே, 'எம்பெருமானே, நீயே சொல்லி யருள்' என்று சொல்கிறார்.

அருள் எமக்கு.

இறைவனுடைய திருநீல கண்டத்தின் ஒளியிலே சொக்கிப் போய், அதைப் பார்த்துப் பார்த்து இன்புறுகிறார் அம்மை யார். ஒரு செப்புக்குள் மற்றொரு செப்பைப் போட முயலும் குழந்தை இரண்டின் அளவையும் தெரிந்து கொள்ளாமையால், ஒவ்வொன்றாக எடுத்து வைத்துப் பார்ப்பது போல அம்மையார் உவமைச் செப்பில் கண்டத்தொளியை அடைக்கப் பார்க்கிறார்.

இருளின் உருஎன்கோ?
மாமேகம் என்கோ?
மருள் இல் மணிநீலம்
என்கோ?-- அருள் எமக்கு;
நன்று உடையாய், செஞ்சடைமேல்
நக்கு இலங்க வெண்மதியம்
ஒன்று உடையாய் கண்டத்து ஒளி.

நல்லவற்றையெல்லாம் உடையவனே, செந்நிறம் படைத்த சடையின்மேல் ஒளி விட்டு விளங்கும்படி வெண்ணிறம் பெற்ற ஒன்றை உடையவனே, உன்னுடைய திருக்கழுத்தில் நஞ்சினால் உண்டான ஒளியை இருளின் உருவம் என்று சொல்வேனா? கரிய மேகம் என்று சொல்வேனா? மயக்கமின்றித் தெளிவாக வண்ணம் தெரியும் நீலமணி என்று சொல்லட்டுமா? எது சரி என்பதை நீயே எமக்குச் சொல்லியருள வேண்டும்.

[உரு—நிறம். என்கோ—என்று சொல் வேனா? மா—கருமை. மருள் இல் மணிநீலம்—என்ன நிறம் என்று தெரியாமல் மயங்குதல் இன்றித் தெளிவாகத் தெரியும் நீலமணி. மணிநீலம்—நீலமணி. எமக்கு அருள் வாயாக. நன்று—நல்ல பண்புகள்; தொகுதி ஒருமை. எமக்கு அருள் நன்று உடையாய் என்று சேர்த்து, 'அடியேங்கள் திறத்தில் திருவருளை நன்றாக உடையவனே' என்றும் பொருள் கொள்ளலாம். நக்கு—ஒளிவிட்டு. 'நச்சிலங்கு வெண்மதியம்' என்பதும் ஒரு பாடம். பிறையாதலின் மறுவின்றி முழு வதும் வெண்மையான மதியம் என்றார். மதியம் என்பது முழுமதியைக் குறிக்கப் பெரும்பாலும் வருமேனும் இங்கே பிறையைக் குறித்தது.

செஞ்சடை மேலிருப்பதனால் வெண்மதியம் நன்றாக விளங்குகிறது. கண்டத்து ஒளி—திருக்கழுத்திலுள்ள ஒளியை. எழுவாயாக வைத்து 'ஒளி இருளின் உரு என்கோ?' என்று பொருள் கொள்வதும் பொருந்தும்.

ஒளி என்கோ, என்கோ, என்கோ? எமக்கு அருள் என்று கூட்டி முடிக்க.

இறைவனுடைய திருநீலகண்டத்தைக் கண்டு தம் சிந்தனையை அதிற் பதித்து நின்று பாடுகிறார் அம்மையார்.]

இது அற்புதத் திருவந்தாதியில் 88-ஆவது பாடலாக அமைந்தது. □



பிறருக்கு உதவுவதே பேராண்மை

நாடோடி

மக்களின் குறைகளைக் கண்டுபிடிப்பதற்காக அரசன் விக்கிரமாதித்தன் அடிக்கடி மாறுவேடம் பூண்டு, நகர சோதனை செய்வதுண்டு. ஒரு சமயம் அவன் தன் குதிரைமீது ஏறி, தன்னந்தனியாக ஒரு காட்டின் வழியே சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பசு தீனக்குரலில் கத்துவது கேட்கவே, சப்தம் வந்த திசையை நோக்கிப் பறந்தான். அங்கு ஒரு பசு ஒரு நதியின் சேற்றில் அகப்பட்டுக்கொண்டு வெளியே வர முடியாமல் தவித்தது.

பசுவைச் சேற்றிலிருந்து வெளியே கொண்டுவர அரசன் எவ்வளவோ முயன்ருன். ஆனல் அவனல் முடியவில்லை. பொழுது போகும்வரை அவன் முயன்று பார்த்தான். ஆனல் பசுவை வெளியே கொணர முடியவில்லை.

என்ன செய்வதென்று தெரியாமல் அரசன் திகைத்துக்கொண்டிருந்தபோது ஒரு சிங்கம் பசுவின்மீது பாய வந்தது. உடனே அரசன் தன் வாளை உருவி, சிங்கம் பசுவின் மீது பாயாமல் தடுத்தான். இரவெல்லாம் சிங்கம் பசுவின் மீது பாய வந்தது. அரசன் திரும்பத் திரும்பச் சிங்கத்தைத் தடுத்து நிறுத்திக்கொண்டிருந்தான்.

நதிக் கரையில் ஓர் ஆலமரம் ஓங்கி வளர்ந்திருந்தது. அதில் இருந்த ஒரு கிளி விக்கிரமாதித்தனைப் பார்த்து, "பசுவோ சேற்றில் நன்கு அமிழ்ந்துவிட்டது. அது எப்படியும் சாகத்தான் போகிறது. எதற்காக அதைக் காப்பாற்றுவதற்காக உன் உயிரைப் பணயம் வைக்கிருய்? நீ களைத்திருக்கும் சமயம் பார்த்துச் சிங்கம் உன் மீது பாய்ந்து உன்னைக் கொன்றுவிட்டால் என்ன செய்வாய்?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன் கிளியைப் பார்த்து, "கிளியே, எனக்கு அதர்ம வழியைக் காண்பிக்காதே! தங்கள் உயிரை எல்லா ஜீவன்களும்தான் காப்பாற்றிக் கொள்கின்றன. ஆனல் பிறரைக் காப்பாற்றுவதற்காகத் தமது உயிரைக் கொடுப்பவர்கள்தாம் பாக்கிய சாலிகள். எப்படித் தலைவன் இல்லாத் சேனை பிரயோஜனமற்றதோ, அதேமாதிரி தயை இல்லாத எந்தப் புண்ணிய காரியமும் வீண்தான்" என்ருன்.

இரவு முழுவதும் அரசன் சிங்கத்தைத் துரத்துவதிலேயே இருந்தான். ஆனல் பொழுது விடிந்ததும் பார்த்தால் அங்கே பசுவையும் காணவில்லை, சிங்கத்தையும் காணவில்லை. அதற்குப் பதில் அங்கே இந்திரன், தர்மன், பூதேவி ஆகிய மூவரும் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் அரசனை வாழ்த்தி, அவனுக்குக் காமதேனு என்ற பசுவை அன்பளிப்பாக அளித்தார்கள்.

துகாராம்

துகாராமின் பக்தியைப் பற்றியும், சிறந்த குணங்களைப் பற்றியும் கேள்வியுற்ற சத்ரபதி சிவாஜி அவரைப் பார்க்க ஆசைப்பட்டார். ஆகவே பல்லக்கு, குதிரை, யானை முதலிய பல வாகனங்களை அவரிடம் தம் சேவகர்மூலம் அனுப்பி வைத்தார்.

சேவகர் துகாராமை வணங்கி, ''சத்ரபதி சிவாஜி தங்களைத் தரிசிக்க விரும்புகிறார். தாங்கள் எந்த வாகனத்தை விரும்புகிறீர்களோ அந்த வாகனத்தில் ஏறி வரலாம்'' என்று சொன்னார்கள்.

துகாராம், ''நான் சத்ர்பதி சிவாஜியைப் பார்க்க வேண்டுமானால் எனக்கு ஒரு வாகனமும் தேவையில்லை. கடவுள் கொடுத்த கால் இருக்கிறது; நடந்தே வர முடியும். ஆனால் தங்கள் மன்னரிடம் சொல்லுங்கள் : நான் இங்கு விட்டலின் தொண்டில் ஈடுபட்டுள்ளேன். ஆகவே தயவுசெய்து என்னை இங்கேயே இருக்கவிடச் சொல்லுங்கள்'' என்றார்.

ராஜசேவகர் திரும்பிச் சென்றார்கள். ஆனால் வழியில் வலுவில் வந்த லக்ஷ்மியைத் துகாராம் இப்படிக் காலால் உதைத்து அனுப்புகிறாரே என்று பேசிக்கொண்டார்கள்.

துகாராம் சொல்லியனுப்பியதைச் சிவாஜி கேட்டார். அத்தனை பெரிய பக்தரைத் தாம் அழைத்து வரச் சொன்னது தவறு; தாமே அவரைப் போய்ப் பார்த்திருக்க வேண்டும் என்று நினைத்து, அவரைப் பார்க்கச் சென்றார்.

பொற்காசுகள் நிறைந்த ஒரு பையை அவர் முன்னால் வைத்து, அவர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

துகாராம், ''மகாராஜா ! தாங்கள் தர்மரக்ஷகர். அப்படியிருந்தும் ஏழைப் பக்தனாகிய என்னைப் பணம் என்னும் மாயையில் சிக்க விடலாமா? இது என் பக்திக்கு இடைஞ்சலாகும். தயவுசெய்து எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றார்.

பணத்தாசை சிறிதுமின்றி இருந்த துகாராமைக் கண்டு சிவாஜி வியந்தார். பிறகு அடிக்கடி அவரைத் தரிசனம் செய்து வந்தார்.

வெகுளாமை

காசியில் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு ஒரு துறவி வந்துகொண்டிருந்தார். தெருவில் மிகவும் கூட்டம் இருந்ததால், ஒரு சண்டாளனுடைய ஆடை இவர்மீது பட்டுவிட்டது.



இதைக் கண்டு துறவிக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. அவர் தம் கையில் இருந்த கழியினால் சண்டாளனை அடித்ததோடு, ''உன்னால் நான் மீண்டும் கங்கையில் போய் நீராட வேண்டும்'' என்று சொன்னார்

அதற்கு அந்தச் சண்டாளன், ''நீங்கள் ஸ்நானம் செய்கிறீர்களோ இல்லையோ, நான் கட்டாயம் ஸ்நானம் செய்தாக வேண்டும்'' என்றான்.

''ஏன்?'' என்று கேட்டார் துறவி.

அதற்கு அந்தச் சண்டாளன் சொன்னான் : ''என்னைவிட அதிகச் சண்டாளமான கோபம் தங்களைப் பற்றிக்கொள்ள, அது என்னைத் தொட்டுவிட்டது. ஆகவே அந்தப் பாவம் போக நான் கங்கையில் ஸ்நானம் செய்தாக வேண்டும்.''

இராமாயணக் கடலிலிருந்து சில இரத்தினங்கள்

வி. தியாகராஜன்

கம்ப இராமாயணத்தில் பொதிந்திருக்கும் நுட்பமான தத்துவங்களை விளக்கும் கட்டுரை இது.

இராமாயணம் ஒரு கடல்; ஆனால் உவர்க் கடல் அல்ல; உவட்டாது இனிக்கும் கடல். முழுதும் முத்துக்களும் இரத்தினங்களுமான கருத்துக்கள் நிறைந்த மகாகாவிய சாகரம். சில இடங்களில் முரண்பாடோ என நமக்குத் தோன்ற வைத்துப் பின்னர் உண்மைக் கருத்துக்களை அறிந்ததும் நம்மை இன்புறச் செய்யும் இராமகதாசாகரம்.

வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே

எனக் கோசல தேசத்தின் விருந்தோம்பும் ஈகையைப் பாடுங்காலத்து, 'வருந்தி வந்தவர்க்கு' என்ற சொற்கள், 'அந்த நாட்டில் பசியால் வருந்தி வந்து உணவு உண்பவர் பலர் உண்டோ?' எனத் தோன்றவைக்கின்றன. சில பாடல்களுக்குப் பின், 'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' எனக் கவிஞன் கூறும்போது, அந்த நாட்டில் வறுமையே இல்லாததனால் கொடையாளிகளே இல்லை எனக் கூறுகிறான்.

'வருந்தி வந்தவர் — வறுமையின்மை' என்பது நம்மைத் திகைக்க வைக்கிற தன்றோ? குழந்தைகளுக்குப் போதிக்கும் நீதி நூலில்கூட, 'ஏற்பது இகழ்ச்சி' என, எவரிடமும் எதையும் ஏற்க வேண்டாம் எனக் கூறிய பின், அடுத்த வரியிலேயே, 'ஐயம் இட்டுண்' எவருக்காவது உணவிட்டுப் பின்னர் நீ உணவு கொள் எனக் கூறுவது திகைப் பூட்டுகிறதல்லவா? நன்கு ஆராய்ந்தால் கவிஞர்களின் மிக்க அழகான நயத்தைக் கண்டு களிக்கலாம்.

'ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி' என்பது ஆண்டாளின் திருவாக்கு. பிச்சை எடுப்பது குற்றம் என்பதையே 'ஏற்பது இகழ்ச்சி' எனக் குறித்தார். 'ஐயம்' என்பது தக்க பெரியோரை அழைத்து, அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி யாவது எதையாவது அளித்து ஏற்கச் செய்து அவர்களின் ஆசிபெறுவதாகும்.

இராமபிரான் பிறந்த அயோத்தியில் பிச்சை ஏற்பவர் இல்லை; எனவே இடுபவரும் இல்லை என்பதைக் கம்பர் கூறினார். எனினும் பெரியோர்களை, வந்தவர்களை வருந்தி உபசரித்தனர். 'வந்தவர்க்கு வருந்தி ஈந்தனர்' எனக் கூறி ஐயமிட்ட அழகினை வெளியிட்டார்.

* * *

இராமபிரானை நாடாள வேண்டிய நல்ல தினத்தில் காடு செல்லும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டதைக் கேட்ட இளையவன் கோபத் தீயாகவே மாறிக் கொதிக்கிறான். தம்பியை நல்வார்த்தை கூறிச் சமாதானம் செய்ய வந்த இராமபிரான், 'விதியின் செயலுக்கு நாம் கோபமடையலாமா?—விதியின் பிழை இதற்கு என்னை நீ வெகுண்டது?' என்றபோது, இளையவன் சீற்றம், மேலும் அதிகமாகி, 'விதிக்கு என் வில் பதில் கூறும், காண்க—விதிக்கும் விதியாகும் என் விற் செயல் காண்டி' என்கிறான்.

இராமபிரான் மாயமானின் பின்சென்று அதைக் கொன்றபோது அந்த மான் இராமபிரானுடைய குரல் போன்று தன் குரலை மாற்றிக்கொண்டு ''சீதா, லக்ஷ்மணா!'' என்று அலறி உயிர்விட, அந்தக் குரலைக் கேட்டு இராமபிரானுக்கு ஏதோ ஆபத்து என எண்ணிக் கலங்கிய பிராட்டியார், இளையவனை உடனே சென்று இராமபிரானைத் தேடி வருமாறு கூற, இளையவன், ''இராமபிரானுக்கு எந்த ஆபத்தும் நேராது, கவலைப் படாதே'' என எவ்வளவோ கூறியும்

ஆறுதல் அடையாத சீதாபிராட்டி, ஆத்திர மடைந்து இளையவனைக் கோபித்து, இளைய வன் உடனே இராமபிரானைத் தேடிச் செல்லாவிட்டால் தன்னை அழித்துக்கொள் வதாகப் பயமுறுத்துகிறுள்.

இது கேட்டு வருந்திய இளையவன், ''நான் போகிறேன். என்ன என்னவோ சொல்லி விட்டாய், தாயே. விதியினை யார் வெல்ல முடியும்?'' எனக் கூறி, அவ்விடம் விட்டு அகன்ருன்.

'வெஞ்சின விதியினை வெல்லலாகுமோ?' என்று இளையவன் கூறியதற்கு என்ன காரணம்? விதிக்கும் விதியாகும் அந்த வில்லின் வலிமை குறைந்துவிட்டதா?

இராமபிரானும் சீதாபிராட்டியும் திருமாலும் திருமகளும் என்ற உண்மையையும்,

சென்ருல் குடையாம்; இருந்தால் சிங்காசனமாம்;
நின்ருல் மரவடியாம்; நீள்கடலுள்—என்றும்
புணையாம், மணிவிளக்காம், பூம்பட்டாம், புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு

என்றபடி, ஆதிசேஷனே இராமாவதாரத் திலும் தன் தெய்வமான திருமாலுக்குச் சேவை செய்ய இளையவனுக வந்துள்ளான் என்ற உண்மையையும் மறவாமலிருந்தால், விதிபற்றி இளையவன் கூறும் முரண்பட்டுள்ள கருத்துக்களின் உண்மையைப் புரிந்து கொண்டுவிட முடியும்.

அம்மை—அப்பன் போன்று சீதாராமர்கள் பக்கத்தில் இருந்தபோது, ''உங்களைப் பிரியாத நான் என் வில்வலியால் விதியை யும் வெல்வேன்'' எனக் கூறிய ஆதிசேஷாவ தாரமான இளையவன், ''இராமபிரான் மானின் பின் சென்றுவிட்டார். நீயும் என்னை விரட்டுகிருய். பெருமாளும் பிராட்டி யும் இல்லாமல் தனியாகிவிட்டேன். எனவே என்னுல் வெஞ்சின விதியினை வெல்ல லாகுமோ?'' என்று இப்போது சொல்லு கிருன்.

இருவரும் சேர்ந்தால் பூரணமான கருணை. பிரிந்தால்? அதே முறையில் இந்தத் தெய்விகத் தம்பதிகளைப் பிரிக்க முயன்றவர் களும் நன்மையடையவில்லை.

சீதாபிராட்டியிடமிருந்து இராமபிரானைப் பிரிக்க முயன்ற சூர்ப்பணகை நிர்க்கதியாகித் தன் குலத்திற்கே கேட்டை உண்டாக்கினுள். இராமபிரானிடமிருந்து சீதையைப் பிரித்த இராவணன் அழிந்தான் என்பது வெளிப் படை.

இருவரும் சேர்ந்திருக்கும் நிலையில் வழிபடு வோர் விதியையும் வெல்லும் சக்தி பெறுவர் என்பது இளையவனின் கருத்து என்பதைக் காண்கிருேம்.

* * *

இந்த இடத்தில்கூட, ''ஒரு பெண்ணின் பேச்சைக் கேட்டு மானின் பின்சென்ற இராமபிரான் அல்லலடைந்தார்'' என்பர் சிலர்.



இராமபிரான் தாம் அவதரித்ததற்கு என்ன காரியம் செய்ய வேண்டுமோ அதைச் செய் தாரே தவிர, தவறிழைக்கவேயில்லை. சீதா பிராட்டி மானை உயிருடன் விரும்பினுளே தவிர, அதைக் கொல்லுமாறு கூறவில்லை.

இராமன் சீதையின் சொற்படி மானைப் பிடித்துக் கொடுத்திருந்தால், இராவண வதம் என்ற பெருங் காரியத்திற்குக் காரண மான சீதாபகரணமே நடந்திருக்காது.

இராமனைத் தெய்வநிலையில் வைத்துப் பார்த்துவிட்டோமென்ருல் அவர் செய்த ஒவ்வொரு காரியமும் அவசியமானது,

நேர்மையானது என்பதை உணரலாம். இராமன் சீதை சொற்படி நடவாதது சரியாயிற்று.

* * *

சடாயுவின் மறைவுபற்றிப் பேசும் சிலர், 'அனுமானை என்றும் இருப்பாய் என வாழ்த்திய சீதாபிராட்டி, சடாயுவையும் வாழ்த்தியிருக்கலாமே' என்கின்றனர்.

அனுமான் சீதையைத் தமக்கு அன்னையாக எண்ணினார். மகன் என்ற முறையில் பிராட்டி வாழ்த்தினாள். ஜடாயுவோ இராமபிரானைத் தமது மகனாகவும் பிராட்டியைத் தமது மருமகளாகவும் எண்ணியவர். மருமகள் தன் மாமனாகிய பெரியோனை வாழ்த்த முடியாது என்பதை உணர்ந்தால், இந்தச் சந்தேகம் நீங்கிவிடும்.

* * *

'வாலியை இராமபிரான் கொல்லாமலே விட்டிருக்கலாம். இராவணவதம் செய்வதற்கு வாலிவதம் அவசியமா?' என்பது சிலர் கேள்வி.

பிறர் மனையைத் தீண்டியவனுக்கு மரண தண்டனை என்பது பொது விதி. வாலியாக வந்தவன் தேவேந்திரன். ஏற்கனவே அகலிகையைத் தீண்டி அபசாரப்பட்டவன். இராவணவதம் என்ற தேவகாரியத்திற்காக மற்றத் தேவர்களுடன் பூவுலகம் வந்து வாலி என்று பெயர் கொண்ட பின்பும், தம்பியின் மனைவியை, தனக்கு மகளாக எண்ண வேண்டிய பெண்மணியை விரும்பியதனால் ஏற்பட்ட குற்றம் காரணமாக, இராமபிரான் அவனை அழிக்க நேரிட்டது.

தான் வந்த காரியத்தையும் மறந்து தகாத அரக்கனுடன் நட்புப் பூண்டதைக் கூட இராமபிரான் குற்றமாகக் கருதவில்லை. பிறன்மனையை நயத்தல் என்ற ஒரே குறை தான் வாலிவதத்திற்குக் காரணம்.

* * *

சுந்தரகாண்டத்தில் கணையாழிக் கட்டத்தில் கம்பன் மிக அழகிய ஒரு மரியாதையைக் காட்டியுள்ளான். இராமபிரானது கணையாழியைப் பிராட்டியிடம் அனுமன் காட்டினன்; கொடுக்கவில்லையாம்! தாயான சீதை அனுமானின் திருக்கரத்திலிருந்து எடுத்துக் கொண்டனள்—வாங்கினள் எனப் பாடுகிறான். தாயின் கை தாழ்ந்து மகனது கை மேலே வரக்கூடாது என்று அழகாகக் காட்டப்படுகிறது.

சீதாபிராட்டி சூடாமணி கொடுத்தனள், அனுமான் அதனைத் தொழுது வாங்கினன் என்றும் கூறி, அன்னையிடம் அனுமானுக்கு உள்ள மரியாதையும் காட்டப்படுகிறது.

* * *

சீதையை இராமபிரான் அக்கினிப் பிரவேசம் செய்யுமாறு கூறியது இரக்கமற்ற தன்மை என்பது சிலரது கருத்து.

சீதாபிராட்டியை அலங்காரவதியாகத் தம் எதிரில் வருமாறு இராமர் சொல்லியனுப்புகிறார். ஏன்? சிறையிருந்த செல்வியாக இருந்த அம்மை தவக் கோலத்தில் இருந்தாள். தவக் கோலத்தில் இருப்பவர்களைக் கண்டித்துப் பேசக்கூடாது என்ற தவநிலைக்கு இராமபிரான் காட்டிய மரியாதையே காரணம்.

சீதாபிராட்டியைக் கண்ட இராமபிரான், "கண்வலிக்காரனுக்குத் தீபத்தைக் கண்டால் கூசுவது போல உன்னைக் காண என் கண்கள் கூசுகின்றன" எனக் கூறியதாக வால்மீகி குறிப்பிடுகிறார். காணும் கண்களில் குற்றமே தவிர, தீபத்தின் மீது குற்றமில்லை என்று கருதுமாறு செய்து, சீதாபிராட்டி குற்றமற்றவள் என முன்னாலேயே சூசனையாகக் கூறி விடுகிறார் வான்மீகி..

கம்பனும், "சீதாபிராட்டி மயில் மாதிரி வணங்கினாள்; இராமன் படமெடுத்த பாம்பாகச் சீறினார்"

வணங்கிய மயிலினைக் கற்பின் வாழ்வினைப்
பணங்கிளர் அரவென எழுந்து பார்ப்புறு

எனக் கூறி, இந்தச் சோதனையில் பிராட்டி வெற்றியடைந்து விடுவாள் எனக் காட்டி

விடுகிருன். மயிலின் எதிரில் பாம்பு சீறினல் என்னுவது?

சீதாபிராட்டி ஆரண்யகாண்டத்தில் இராமனைத் தேடி வருமாறு கடிந்து கூறியபோது இளையவனது குணத்தைச் சந்தேகித்த மாதிரி தொனிப்படப் பேசிவிடுகிருள். வால்மீகியில் இது சிறிது நன்ருகவே காணப்படுகிறது. பிறரைச் சந்தேகித்தால் அவர் மனம் எத்தகைய பாடுபடும் என்பதைப் பிராட்டி புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே, இராமபிரான் அவளைச் சந்தேகித்த மாதிரி பேசிவிடுகிருர். சீதை மனம்நொந்து தன் குற்றத்தை உணர்ந்ததாகக் காட்டிக் கொள்வதற்காக, ''அண்ணன் மனைவியான அண்ணியை அன்னையாக எண்ணி அடி வணங்கிய இளையோய்! உன் மனம் அன்று எவ்வளவு புண்பட்டிருக்கும் என்பது, என்மீது பிறர் சந்தேகிக்கும்போதுதான் புரிகிறது. உன்னிடம் வாயளவில் மன்னிப்புக் கேட்டால் போதாது. உன்னை அவ்வாறு பேசிப் புண்படுத்திய என் உடலை அழிக்க நீயே தீ மூட்டு!''

இளையவன் தனை அழைத்து இடுமின் தீயென
வளையொலி முன் கையாள் வாயிற் கூறினுள்

என்கிருன் கவிஞன். எனவே இராமபிரான் குற்றமே செய்யவில்லை என அழகாகக் காட்டப்பெறுகிறது.

* * *

இராமபிரான் திருமுடி சூடும் பாடலிலே ஓர் அழகு. அந்தப் பாடலில் 'கிரீடம் வைக்கப்பட்டது' எனக் கூறப்பட்டது. இராமபிரானின் பெயரைக் காணவில்லை.


அரியணை அனுமன் தாங்க அங்கதன்
உடைவாள் ஏந்தப்
பரதன் வெண்குடை கவிக்க இருவரும்
கவரி வீச
விரைசெறி குழலியோங்க வெண்ணெயூர்ச்
சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே
புனைந்தான் மௌலி

என்கிருன் கம்பன். கிருஷ்ணுவதாரத்தில் கோபி ஒருத்தி கயிறுகொண்டு கண்ணனை அடித்த போதும், சிவபெருமான் முதுகில் அடிபட்டபோதும் உலகில் யாவருடைய முதுகிலும் அடிபட்டது என்பது வரலாறு. அதே முறையில் இராமபிரானது திருமுடியில் சூட்டப்பட்ட கிரீடம் எல்லா உலகத்தவருடைய தலையிலும் வைக்கப்பட்ட மாதிரி யாவரும் உணர்ந்தார் எனக் கூறி, இராமபிரான் பரம்பொருளே என்ற தெய்வநிலையைக் காட்டுகிருன் கம்பன்.

ஓங்கு மூவுலகத் தோர்க்கும்
தத்தம் உச்சியின் மேல் வைத்ததொத்தெனத்
தளர்வு தீர்ந்தார்

என்ற கம்பன் வாக்கு, இராமனின் எங்கும் நிறைந்த தன்மையைக் காட்டுகிறது. இராமபிரான் தெய்வமே என்றும், நம் போன்றவர் நல்ல வழியில் நடக்கத் தாம் மனித உருவில் வந்தவர் என்றும், எந்தக் குற்றமும் செய்யாத குணங்களால் உயர்ந்த வள்ளல் என்றும் அறிகிருேம்.

இராமன் காட்டிய வழியில் நடந்து நாமும் மேன்மை பெற அவனருளை வேண்டுவோம்.



விடுதலைக்கு வாயிலான மானிட சரீரத்தை அடைந்திருந்தும் உலக வாழ்க்கையில் பற்றுக் கொண்டிருப்பவன், உயர்ந்த பதவியிலிருந்து கீழே விழ்ந்தவனுக்கு ஒப்பானவன்.

—ஸ்ரீமத் பாகவதம், 1-7-74



ஸ்ரீ விச்வநாதாஷ்டகம்

தமிழாக்கம் : 'அண்ணா' சுப்ரமண்யம்

ஸ்ரீகாசி விச்வநாதரைக் குறித்து வியாசர் அருளிய அஷ்டகம் இது.

கங்கா-தரங்க-ரமணீய-ஜடா-கலாபம்
கௌரீ-நிரந்தர-விபூஷித-வாமபாகம் ।
நாராயண-ப்ரிய-மனங்க-மதாபஹாரம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

கங்கையின் அலைகளால் அழகிய விரிந்த சடைகளை உடையவரும், இடைவிடாது இடது பக்கத்தை அலங்கரிக்கும் கௌரீதேவியை உடையவரும், நாராயணருக்குப் பிரியமானவரும், மன்மதனுடைய கொழுப்பை அடக்கியவரும், வாராணஸீபுரியின் தலைவருமாகிய விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 1 ॥

வாசாமகோசர-மனேக-குணஸ்வரூபம்
வாகீசவிஷ்ணு-ஸுரஸேவித-பாதபீடம் ।
வாமேன விக்ரஹவரேண களத்ரவந்தம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

வாக்குக்கு எட்டாதவரும், பற்பல சிறந்த குணங்களே உருவாகியவரும், பிரம்மாவாலும் விஷ்ணுவாலும் தேவர்களாலும் சேவிக்கப்பெற்ற திருவடிப் பீடத்தை உடையவரும், அழகிற் சிறந்த மனைவியை இடதுபுறம் உடையவரும், வாராணஸீபுரியின் தலைவருமாகிய விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 2 ॥

பூதாதிபம் புஜகபூஷண-பூஷிதாங்கம்
வ்யாக்ராஜினம்பரதரம் ஜடிலம் த்ரிநேத்ரம் ।
பாசாங்குசாபயவர-ப்ரத-சூலபாணிம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

பூதங்களுக்குத் தலைவரும், பாம்புகளை ஆபரணங்களைப் போல் அணிந்த அங்கங்களை உடையவரும், புலித்தோலை ஆடையாக உடுத்தவரும், சடைகளை உடையவரும், முக்கண்ணரும், பாசம், அங்குசம், அபயமுத்திரை, வரமுத்திரை, சூலம் ஆகியவற்றைக் கைகளில் தரிப்பவரும், வாராணஸீபுரியின் தலைவருமாகிய விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 3 ॥

சீதாம்சுசோபித-கிரீட-விராஜமானம்
பாலேக்ஷணநல-விசோஷித-பஞ்சபாணம் ।
நாகாதிபாரசித-பாஸுர-கர்ணபூரம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனால் அழகிய கிரீடத்துடன் விளங்குபவரும், நெற்றிக் கண்ணில் தோன்றிய நெருப்பால் மன்மதனைப் பொசுக்கியவரும், சிறந்த பாம்புகளைக் காதணியாக உடையவரும், வாராணஸீபுரியின் தலைவருமாகிய விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 4 ॥

பஞ்சானனம் துரிதமத்த-மதங்கஜானும்
நாகாந்தகம் தனுஜபுங்கவ-பந்நகானும் ।
தாவாநலம் மரண-சோக-ஜராடவீனும்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

பாவங்களாகிற மதயானைகளுக்குச் சிங்கம் போன்றவரும், அசுர வீரர்களாகிற பாம்புகளுக்குக் கருடன் போன்றவரும், சாவு துன்பம் மூப்பு ஆகிற காடுகளுக்குக் காட்டுத் தீப் போன்றவரும், வாராணஸீபுரியின் தலைவருமாகிய விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 5 ॥

தேஜோமயம் ஸகுண-நிர்குண-மத்விதீயம்
ஆனந்த-கந்த-மபராஜித-மப்ரமேயம் ।
நாதாத்மகம் ஸகலநிஷ்கள-மாத்மரூபம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

ஒளிப்பிழம்பு போன்றவராகவும், குணங்களுடன் கூடியவராயினும் குணங்களைக் கடந்தவராகவும், இரண்டற்றவராகவும், ஆனந்தத்திற்கு வேர் போன்றவராகவும், எவராலும் வெல்ல முடியாதவராகவும், அளவிட முடியாதவராகவும், நாதமே உருக்கொண்டவராகவும், அவயவங்களுடன் தோன்றுபவராயினும் அவயவங்களற்றவராகவும், ஆத்மவடிவினராகவும், வாராணஸீபுரியின் தலைவராகவும் உள்ள விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 6 ॥

ஆசாம் விஹாய பரிஹ்ருத்ய பரஸ்ய நிந்தாம்
பாபே ரதிஞ்ச ஸுநிவார்ய மனஸ்ஸமாதௌ ।
ஆதாய ஹ்ருத்கமல-மத்யகதம் பரேசம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

ஆசையைத் துறந்து, பிறரை நிந்திப்பதை ஒழித்து, பாவத்தில் உள்ள பற்றை விலக்கி, மனதை ஸமாதியில் நிறுத்தி, இருதயத் தாமரையின் நடுவில் உறையும் பரமசிவனும் வாராணஸீபுரியின் தலைவருமான விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 7 ॥

ராகாதி-தோஷரஹிதம் ஸ்வஜனானுராக-
வைராக்ய-சாந்தி-நிலயம் கிரிஜா-ஸஹாயம் ।
மாதுர்யதைர்ய-ஸுபகம் கரளாபிராமம்
வாராணஸீபுரபதிம் பஜ விச்வநாதம் ॥

விருப்பு வெறுப்பு முதலிய குற்றங்களற்றவரும், தன்னை அண்டியவர்களிடம் அருள், வைராக்கியம், அமைதி ஆகியவற்றின் உறைவிடமாக இருப்பவரும், மலையரசன் பெண்ணாகிய பார்வதியைத் துணைவியாக உடையவரும், இனிமை தைரியம் ஆகிய நற்குணங்களை உடையவரும், கழுத்தில் விஷத்தால் அழகியவரும், வாராணஸீபுரியின் தலைவருமாகிய விச்வநாதரைப் போற்றுவாயாக. ॥ 8 ॥

பிறரிடம் அன்பு பாராட்டாமலும் பிறர் அன்புக்குப் பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா.

—ஒரு மகான்

உன்னை நீ ஜனன மரணத்திலிருந்து விடுவித்துக் கொள்வதற்காகவே கருணைக் கடலான இறைவன் உனக்கு மனிதப் பிறவியை அருளியுள்ளான். அவனுக்காகவே உயிர் வாழ்வாயாக. அவனிடமே உறைவாயாக. இங்கேயே அவனை அறிந்து முக்திபெறு.

—ஒரு சாது

அருள்நெறிக் கதை

கங்கா ஸ்நானம்

நாடோடி

ஒரு சமயம் பரமசிவனும் பார்வதியும் ஹரித்துவாரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது நூற்றுக்கணக்கானவர் கங்கையில் ஸ்நானம் செய்வதும் பிறகு வீடு திரும்புவதுமாக இருந்தனர்.

அவர்களைப் பார்த்ததும், பார்வதி பரமசிவனைப் பார்த்து, ''பிரபோ! கங்கையில் ஸ்நானம் செய்தால் எல்லாப் பாவங்களும் போகும் என்பார்களே. ஆனால் இவர்களுடைய பாவங்களோ கஷ்டங்களோ மறைந்ததாகத் தெரியவில்லையே?'' என்று கேட்டாள்.

''இவர்கள் கங்கையில் ஸ்நானம் செய்தால் அல்லவோ இவர்களுடைய பாவங்கள் தொலைவதற்கு! இவர்கள் எங்கே ஸ்நானம் செய்தார்கள்?'' என்று பரமசிவன் கேட்டார்.

''என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? இவர்கள் உடலும் உடையும்கூட இன்னும் காயவில்லை; ஸ்நானம் செய்யவில்லை என்று சொல்லுகிறீர்களே!''

''இவர்கள் ஸ்நானம் செய்யவில்லை. கங்கைத் தண்ணீரில் தங்கள் உடம்பை நனைத்துக்கொண்டு வருகிறார்கள். அதனால்தான் இவர்களுடைய பாவங்கள் போகவில்லை. நாளைக்கு ஒரு வேடிக்கை பண்ணுகிறேன், பார். அப்பொழுது நீயே புரிந்துகொள்வாய்'' என்றார் பரமசிவன்.

அன்று இரவு நல்ல மழை பெய்யவே கங்கைக்குச் செல்லும் பாதை ஒரே சேறுகி விட்டது. வழியில் ஒரு பெரிய பள்ளம் வேறு இருந்தது.

அடுத்த நாள் காலை, பரமசிவன் ஒரு வயோதிக அந்தணர் வேஷம் அணிந்து, அந்தக் குழியில் விழுந்து கிடந்தார். மேலே ஏற முடியாதவர் போலத் தவித்தார். பார்வதி ஓர் இளம்பெண் வேஷம் போட்டுக்கொண்டு குழியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள். அவள் என்ன செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே பரமசிவன் சொல்லிக் கொடுத்திருந்தார்.



''ஐயோ! என் வயதான கிழவர் குழியில் விழுந்துவிட்டாரே! யாராவது கைகொடுத்து இவரைத் தூக்கிவிட மாட்டீர்களா?'' என்று பார்வதி கதறினாள்.

கங்கையில் முழுகிவிட்டுப் பல பேர் வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். ஆனால் கிழவரைத் தூக்கிவிட வேண்டும் என்ற எண்ணம்

யாருக்கும் வரவில்லை. 'இந்தக் கிழவனைப் பற்றி எதற்காக இந்த யுவதி இப்படி வேதனைப்படுகிறாள்? கிழவன் செத்தால் சாகட்டுமே!' என்று பலர் நினைத்தனர். 'இந்த யுவதி நமக்குக் கிடைத்தால் எப்படி இருக்கும்!' என்று சிலர் நினைத்தனர்.

கடைசியில் சிலர் கிழவரைத் தூக்கிவிட முன்வந்தார்கள். ஆனால் பார்வதி அவர்களைப் பார்த்து, ''என் கணவர் ஒரு பாவமும் அறியாதவர். எனவே பாவமற்றவர் தாம் இவரைத் தொடலாம். பாவம் செய்தவர் இவரைத் தொட்டால் அவர்கள் சாம்பலாகி விடுவார்கள்'' என்று சொன்னாள்.

''அப்படியானால் நான் இவரைத் தொட லாயக்கில்லை. நான் எத்தனையோ பாவங்கள் செய்திருக்கிறேன்'' என்று கூறி ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள்.

அன்று முழுவதும் அப்படியே நடந்தது. ஒருவரும் அந்த அந்தணரைத் தூக்கிவிட முன்வரவில்லை.

கடைசியில் ஒரு யுவன் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு அந்தப் பக்கமாக வந்துகொண்டிருந்தான். அவனைப் பார்த்துப் பார்வதி, ''ஐயோ! என் வயதான கிழவர் குழியில் விழுந்துவிட்டார். தாங்கள் கொஞ்சம் தூக்கி விடமாட்டீர்களா?'' என்று கேட்டாள்.

''அதற்கென்ன, இதோ தூக்கி விடுகிறேன்'' என்று சொல்லி, யுவன் பக்கத்தில் சென்றான்.

''ஐயா! இவரைத் தொடாதீர்கள். நீங்கள் பாவமற்றவராக இருந்தால்தான் இவரைத் தொடலாம். இல்லாவிட்டால் பஸ்மமாகப் போய்விடுவீர்கள்'' என்றாள் பார்வதி.

''நான் பாவமற்றவன் என்பதில் என்ன சந்தேகம்? இப்பொழுதுதானே கங்கையில் ஸ்நானம் செய்து, என் பாவங்களை நீக்கி விட்டு வருகிறேன்? ஆகவே நான் பஸ்மமாக மாட்டேன் என்று சொல்லி, யுவன் கிழவரைத் தூக்கி விட்டான்.

உடனே பரமசிவனும் பார்வதியும் அவனுக்குத் தரிசனம் அளித்து அருள்புரிந்தனர்.

''கங்கையில் நம்பிக்கையோடு ஸ்நானம் செய்தால்தான் பாவங்கள் விலகும்; தெரிந்ததா?'' என்றார் பரமசிவன் பார்வதியைப் பார்த்து. ○

நால்வர்

ஓர் அரசன் தன் மந்திரியைப் பார்த்து, ''இந்த நான்கு விஷயங்கள் என்னவென்று சொல்லும், பார்க்கலாம். 1. உண்டு, உண்டு. 2. உண்டு, கிடையாது. 3. கிடையாது, உண்டு. 4. கிடையாது, கிடையாது'' என்று கேட்டான்.



அடுத்த நாளே மந்திரி நான்கு ஆட்களை அரசசபையில் கொண்டுவந்து நிறுத்தினார்: தருமகுணமுள்ள ஒரு பணக்காரர், ஒரு வேசி, ஒரு ஞானி, ஒரு வேடன்.

அரசன் மந்திரியைப் பார்த்து, ''எதற்காக இவர்களை அழைத்து வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

அதற்கு மந்திரி பதில் சொன்னார்: ''நேற்று நீங்கள் என்னைக் கேட்ட கேள்விக்குப் பதில்தான் இவர்கள். இதோ இருக்கிறாரே பணக்காரர், இவர் நல்லொழுக்கம் வாய்ந்தவர், தர்மசீலர். அதனால் இவருக்கு இங்கும் சுகம் உண்டு, அங்கும் சுகம் உண்டு. இந்த வேசி பாவகாரியங்களைச் செய்து கொண்டிருக்கிறாள். அதனால் இவளுக்கு இங்கே சுகம் உண்டு, ஆனால் பரலோகத்தில் கிடையாது. இதோ இந்த ஞானிக்கு இந்த உலகில் சுகம் கிடையாது, ஆனால் மறு உலகில் சுகம் உண்டு. இதோ இந்த வேடன் எப்பொழுதும் பாவகாரியங்களைச் செய்துகொண்டுதான் இருக்கிறான். இவனுக்கு இந்த உலகிலும் சுகம் கிடையாது, மறு உலகிலும் சுகம் கிடையாது.''



'அண்ணா' சுப்ரமண்யம்

அதர்வசிர உபநிஷதம்

1. தேவர்கள் உயர்த்திக் கூப்பிய கைகளுடன் ருத்திரரைத் துதிக்கிறார்கள் :

2. ஓம். எவர் ருத்திரரோ அவரே பகவான், அவரே பிரம்மா, அவரை மீண்டும் வணங்குவோம்.

எவர் ருத்திரரோ அவரே பகவான், அவரே விஷ்ணு, அவரை மீண்டும் மீண்டும் வணங்குவோம்.

எவர் ருத்திரரோ, அவரே பகவான், அவரே ஸத்யம், அவரை மீண்டும் மீண்டும் வணங்குவோம்.

எவர் ருத்திரரோ, அவரே பகவான், அவரே எல்லாம், அவரை மீண்டும் மீண்டும் வணங்குவோம்.

3-1. பூலோகம் உம்முடைய அடி, புவர்லோகம் இடை, ஸுவர்லோகம் தலை. நீர் உலக வடிவாக இருக்கிறீர். பிரம்மமாகிய நீர் ஒன்றாகவும் இரண்டாகவும் மூன்றாகவும் பந்தத்திற்கு உட்பட்டவர் போலும் புலப்படுகிறீர். சாந்தியும் புஷ்டியும் நீரே. ஹோமம் செய்யப்பட்டதும் செய்யப்படாததும், தானம் செய்யப்பட்டதும் செய்யப்படாததும், எல்லாமும் அல்லதும், உலகமும் அதைக் கடந்ததும், செயலும் செயலின்மையும், உயர்ந்ததும் தாழ்ந்ததும், அனைத்திற்கும் புகலிடம் நீரே.

3-2. (உமது அருளாகிற) ஸோமபானம் செய்து நாங்கள் சாவற்றவர்களாகிவிட்டோம். பரஞ்சோதியை அடைந்துவிட்டோம். தேவர்களைக் கண்டுவிட்டோம். எங்களுக்கு இனி எவர் தீங்கிழைக்க இயலும்? மானிடர்களாகிய எங்களுடைய அந்த அமுதத்திற்குக் குறை ஏதுமில்லை.

3-3. ஆதிபுருஷராகிய நீர் சூரியனுக்கும் சந்திரனுக்கும் முந்தியவர். இந்த உலகத்தின் நன்மைக்காக இந்த அழிவற்ற ஆதி புருஷர் பிரஜாபதியால் சிருஷ்டிக்கப்பட்டதும் சூக்ஷ்மமானதும் அழகானதுமான இவ்வுலகத்தைத் தொடாமல் பிடித்து, பாவனையைப் பாவனையாலும், அழகை அழகாலும், சூக்ஷ்மத்தை சூக்ஷ்மத்தாலும், வாயுமயமானதை வாயுவினாலும் அது அதைக் கொண்டே தமது சக்தியால் கவர்ந்து விழுங்கி விடுகிறார். அந்தப் பெரிய கவளத்தை உண்ணும் ருத்ரனுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

3-5. தேவர்களெல்லாரும் இதயத்திலுள்ள பிராணனில் நிலைபெற்றிருக்கிறார்கள். அங்கு இதயத்தில் நீர் உறைகிறீர். அப்படிப்பட்ட நீர் அ, உ, ம (ஜாக்ரம் ஸ்வப்னம்

ஸுஷுப்தி) என்ற மூன்று மாத்திரைகளுக்கும் அப்பால் துரீயத்தில் என்றும் இருப்பவர்.

3-6. ஓங்காரத்தின் தலை உமது இடப் பக்கம். ஓங்காரத்தின் பாதங்கள் உமது வலப் பக்கம். எது ஓங்காரமோ அது (என்றும் புதிதான) பிரணவம். எது பிரணவமோ அது எங்கும் வியாபித்தது. எது எங்கும் வியாபித்ததோ அது அளவு கடந்தது. எது அளவு கடந்ததோ அது நக்ஷத்திரம் போல் வெண்மையாகப் பிரகாசிக்கும். சுக்லம் எனப்படும் அது ஸூக்ஷ்மமானது. ஸூக்ஷ்மமான அது மின்னல் போன்றது. மின்னல் போன்ற அது பரப்பிரம்மம். அந்தப் பரப்பிரம்மம் ஒன்றேயாம்; அந்த ஒன்றே ருத்ரர், அவரே ஈசானர், பகவான், மஹேச்வரர்.

5. ருத்ரர் ஓங்காரரூபி என்று எதனால் கூறப்படுகிறார் எனில், அவர் பிராணன்களை (இறுதிக் காலத்தில்) மேல் நோக்கிச் செலுத்துவதால். ப்ரணவரூபி என்று கூறப்படுவது எதனால் எனில், அதை உச்சரித்த பிறகே ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்ற வேதங்கள் பிராம்மணர்களிடையே வணங்கப்படுவதாலும் பிரசித்தப்படுத்துவதாலும். ஸர்வவ்யாபீ எனக் கூறப்படுவதன் காரணம், 'எள்ளில் எண்ணெய் போல்' எங்கும் சாந்தமாக எல்லா உலகங்களையும் குறுக்கும் நெடுக்கும் ஊடுருவி வியாபித்துச் சிருஷ்டியனைத்திலும் உறைவதனால். அனந்தம் என்பதற்குக் காரணம், மேலோ கீழோ குறுக்கிலோ அவருக்கு முடிவுகாணப் படாமையால். தாரம் என்பதற்குக் காரணம், கர்ப்பவாசம், பிறப்பு, நோய், மூப்பு, மரணம் ஆகியவற்றுடன் கூடிய ஸம்ஸார பயத்திலிருந்து காப்பதனால். சுக்லம் எனப்படுவதற்குக் காரணம், அவர் பெயரை உச்சரிப்பதனாலேயே கிலேசமெல்லாம் நீங்குவதனால். ஸூக்ஷ்மம் என்பது எதனால் எனின், ஸூக்ஷ்மமாகி எல்லாச் சரீரங்களிலும் நிலைபெற்று எல்லா அங்கங்களையும் தொடாமல் தொட்டுக் கொண்டிருப்பதனால். வைத்யுதம் என்பது எதனால் எனின், அவர் பெயரை உச்சரித்த மாத்திரத்தில் பேரிருள் மூடி உருவங்காண முடியாத நிலையில் மின்னற்கொடி போல் ஞான ஒளி ஏற்படுவதனால். பரப்ரஹ்மம் என்பது எதனால் எனின், பரமாகவும், அபரமாகவும், அனைத்திற்கும் புகலிடமாகவும், பெரிதிற்கும் பெரியதாகவும், அனைத்திலும் நிலைத்திருப்பதனால். ஏகன் என்பது எதனால் எனின், எல்லா உயிர்களையும் ஸம்ஹரித்துப் பிறப்பற்ற அவன் ஒருவனே மீண்டும் சிருஷ்டித்து வெளிப்படுத்துவதனால். தீர்த்தம் என்பதற்குக் காரணம், வடக்கிலோ தெற்கிலோ கிழக்கிலோ மேற்கிலோ உள்ள எந்த எந்தப் புண்ணிய தீர்த்தங்களை நாடிச் செல்லுகிறார்களோ அவையனைத்தும் கூடுமிடமாக இருப்பதனால். எல்லாப் பிராணிகளையும் ஒருவனாகவே உற்பத்தி செய்து அவற்றினிடையே ஒருவனாகவே சஞ்சரிப்பதனால் ஏகன் எனப்படுகிறார். (எங்கே போகிறார், எப்படிப் போகிறார் என்று அறிய முடியாமல்) ஓடிக்கொண்டிருக்கும் இவருடைய ரூபம் பிறரால் அறியப்படாமல் ரிஷிகளாலும் மதிப்பிற்கு உரிய பக்தர்களாலும் மட்டும் அறியப்படுவதனால் ருத்ரர் எனப்படுகிறார். எல்லாத் தேவர்களையும் தமது ஆளும் சக்தியாலும் சிருஷ்டிக்கும் சக்தியாலும் அடக்கியாள்வதனால் ஈசானர் எனப்படுகிறார். பாலுக்காகப் பசுவை நாடுவது போல் நாங்கள் உம்மை நாடுகிறோம். வேதமானது உம்மை உலகிற்குச் சொர்க்கத்தைக் காட்டுபவர் என்றும், தேவர்களை ஆள்பவர் என்றும் போற்றுகிறது. அதனால் நீர் ஈசானர். பக்தர்களுக்கு ஞானமளித்து, அவர்களுக்கு அருள் புரிவதனாலும், வாக்கைச் சிருஷ்டித்து வெளிப்படுத்துவதனாலும், அனைத்தையும் துறந்து ஆத்மஞானத்தாலும் யோக ஐசுவரியத்தாலும் உன்னதமான நிலையில் விளங்குவதனாலும் பகவான் மஹேச்வரர் எனவும் கூறப்படுகிறார். இப்படிப்பட்டது ருத்ருடைய சரிதம்.

5-1. இந்தத் தேவரே எல்லாத் திசைகளையும் வியாபிக்கிறார். இவரே ஆதியில் தோன்றியவர். இவரே கருவினுள் இருப்பவர். தோன்றிய அனைத்தும் இனித் தோன்றப்போகும் அனைத்தும் இவரே. உள்

நோக்குடையவராகவும் எங்கும் வெளியே முகம் உடையவராகவும் இருப்பவர் இவரே.

5-2. ருத்ரர் ஒருவரே. அவரைத் தவிர இரண்டாவது இல்லை. அவர் தமது சக்திகளால் இவ்வுலகங்களை ஆளுகிறார். இறுதிக் காலத்தில் அனைத்தையும் தமக்குள் ஒடுக்கிக் கொள்ளுகிறார். உலகனைத்தையும் சிருஷ்டித்துக் காப்பவரும் அவரே.

5-3. பிறப்பிடம்தோறும் அவர் ஒருவரே இருக்கிறார். அவராலேயே அனைத்தும் சஞ்சரிப்பதும் வியவகாரம் செய்வதும். இறைவரும், வேண்டுவார் வேண்டுவதை அளிப்பவரும், போற்றுதற்குரியவரும் ஆகிய அவரை நாடியடைந்து ஒருவன் அளவுகடந்த சாந்தியை அடைவான்.

5-4. முடிவில் அக்கினியும் வாயுவும் ஜலமும் பூமியும் ஆகாயமும் இங்குள்ள அனைத்தும் அவரால் சாம்பலாக்கப்படுகின்றன. இதைக் கண்ணால் கண்டு, மனதால் எண்ணி, பாசுபத விரதத்தைக் கைக்கொண்டு, பஸ்மமாகிய விபூதியை அங்கங்களில் பூசிக் கொள்பவன் பிரம்ம பதத்தை அடைகிறான். இங்ஙனம் பசுபதியை வழிபடுவதனால் பசுவாகிய ஜீவனுடைய பாசமாகிற பந்தம் நீங்கி மோக்ஷம் கிட்டுகிறது.

6. எவரிடம் இவ்வுலகனைத்தும் குறுக்கும் நெடுக்குமாகக் கோக்கப்பட்டுள்ளதோ அவரைக்காட்டிலும் உயர்ந்ததாக வேறு எதுவுமில்லை. காலத்தில் அவருக்கு முந்தியதோ பிந்தியதோ இருந்ததுமில்லை, இருக்கப்போவதுமில்லை. அவருக்கு ஆயிரக் கணக்கான கால்கள்; தலை ஒன்றே. அவராலேயே இது எல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளது. அக்ஷரப்பிரம்மத்தினின்று காலம் உண்டாகிறது. காலத்தினின்று வியாபகம் உண்டாகிறது. வியாபக ரூபமாகியவர் பகவான் ருத்ரர். ருத்ரர் உறங்கும்பொழுது உயிர்களை ஸம்ஹாரம் செய்கிறார். அவருடைய மூச்சுக் காற்றினின்று தமஸ் (ஜடசக்தி) தோன்றுகிறது. தமஸ்ஸிலிருந்து ஜலதத்துவம் உண்டாகிறது. அதை விரலால் கலக்கியதும் குளிர்ச்சியும், குளிர்ச்சியைக் கலக்கியதும் நுரையும், நுரையினின்று பிரம்மாண்டமும், பிரம்மாண்டத்தினின்று பிரம்மாவும், பிரம்மாவிடமிருந்து வாயுவும், வாயுவினின்று ஓங்காரமும், ஓங்காரத்திலிருந்து ஸாவித்ரியும், ஸாவித்ரியினின்று காயத்ரியும், காயத்ரியினின்று உலகங்களும் தோன்றுகின்றன. தவத்தையும் ஸத்தியத்தையும் எவர் பூஜிக்கிறார்களோ அவர்களுக்குச் சாச்வதமான ஆனந்தம் உண்டாகிறது. ஜலமும் ஒளியும் ரஸமும் அம்ருதமுமாக எந்தப் பிரம்மம் உள்ளதோ அதை, 'பூர்புவஸ்ஸுவரோம்' என்று பூஜிப்பதே ஒப்புயர்வற்ற தவம். □

என்ன அவசரம்?

ஒரு வியாபாரிக்கு வெகு உத்தம மனைவி வாய்த்தாள். கடவுள்பக்தியில் அவளுக்கு எத்தனைக்கு எத்தனை ஈடுபாடு உண்டோ, கணவன் அத்தனைக்கு அத்தனை உலக விவகாரங்களிலேயே மூழ்கிக் கிடந்தான். இவனை எப்படியாவது நல்ல வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்று அவள் தீர்மானித்தாள். ஆனால் வியாபாரி கேட்பதாக இல்லை. எதற்கெடுத்தாலும், ''இப்பொழுது என்ன அவசரம்? கடவுள் பஜனை எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம்'' என்று சொல்வான்.

ஒரு சமயம் வியாபாரி வியாதியாய்க் கிடந்தான் அப்பொழுது வைத்தியர் மருந்து கொடுத்துச் சென்றார். ஆனால் மனைவி கணவனுக்கு மருந்தைக் கொடுக்காமல் அதை அலமாரியில் பூட்டிவைத்தாள். அதைக் கண்ட கணவன், ''நான் இறந்தபிறகா நீ எனக்கு மருந்து கொடுக்கப் போகிறாய்?'' என்று கேட்டான். அதற்கு மனைவி, ''இறப்பதற்கு முன்புதான் மருந்து சாப்பிட வேண்டும். அதைப் போலவே இறப்பதற்கு முன்புதான் கடவுளையும் பஜனை செய்ய வேண்டும் நாம் எப்பொழுது இறப்போம் என்று தெரியாது. அதனால் எப்பொழுதும் கடவுளை வழிபாடு செய்துகொண்டே இருக்க வேண்டும்'' என்றாள்.

தியானம் என்பது என்ன?

சுவாமி விவேகானந்தர்

இந்திரியங்களின் மூலம் பெறப்படும் சுக துக்கங்களிலிருந்தும், இயற்கையின் அவஸ்தைகளிலிருந்தும் விடுதலை பெறவேண்டிய ஆற்றலைப் பெறுவதற்கு வேண்டிய சாதனமே தியானமாகும். அதாவது இயற்கைக்கு அடிமையாக இருப்பதை எதிர்க்க உதவும் சக்திக்கே தியானம் என்று பெயர்.

இறைவன் எங்கும் பூரணமாய் நிறைந்துள்ளான். ஆயினும் மனம் அவனைப் பற்றுவதில்லை. மனம் எண்ண அலைகளால் குழம்பி, புலன்களின் வழியில் எப்போதும் சென்று கொண்டிருக்கிறது. இவ்வாறு செல்லும் மனதின் எண்ண அலைகளை அடக்கும் ஆற்றலை வெவ்வேறு முறைகளாலும் பெற முடியும்.

துதிகளும் சடங்குகளும் மற்றும் பல வழிபாட்டு முறைகளும் தியானத்திற்கு அழைத்துச் செல்லும் படிகளேயாகும். இவற்றைப் பாலபாடமாகக் கருத வேண்டும். மந்திரஜபங்கள், துதிகள், மலரிட்டு வழிபடுதல், விக்கிரக ஆராதனை, கோவில்கள், தீப ஆராதனை போன்றவை மனதை ஆன்மிக நிலைக்கு உயர்த்துகின்றன. அந்த ஆன்மிக உணர்வு உங்கள் ஆன்மாவிலேயே உள்ளது. மேற்கூறிய வழிபாடுகளை மக்கள் உணர்ந்து செய்வதில்லை. உணர்ந்து செய்தால் அதுவே தியானத்தின் ஆற்றலாகும்.

தியானப் பயிற்சியில் மிக மெதுவாகவும், படிப்படியாகவும் முன்னேற வேண்டும். ஒரு நாளல்ல, பல வருடங்கள், பல பிறவிகள் வேண்டியிருக்கலாம். சோர்வில்லாமல் தியானத்தில் ஈடுபடப் பழகுங்கள். புரிந்து தன்னிச்சையாகவே இந்தப் பயிற்சி நடைபெற வேண்டும். சிறிது சிறிதாக முன்னேற்றம் அடைந்து வெற்றி பெறலாம். அப்போது ஒரு பெரிய செல்வத்தைப் பெற்றதாக உணர்வீர்கள். இதை ஒருவரும் உங்களிடமிருந்து எடுத்துச் செல்ல இயலாது. யாராலும் இதை அழிக்க முடியாது. இந்த இன்பத்தை எந்தத் துன்பமும் இனிமேல் பாதிக்க முடியாது.

தியானப் பயிற்சிக்குத் தேவையான சூழ்நிலை

தியானம் பயில, தனித்த ஓர் அறையை ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். அந்த அறையில் துயிலுதல் கூடாது. அதைப் புனிதமாக வைத்திருக்க வேண்டும். குளித்துத் தூய ஆடை அணிந்து, மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தி, அந்த அறையில் மனதிற்கினிய தூய படங்களையும், மணம் மிகுந்த மலர்களையும் வைத்து அலங்கரிக்கலாம். இத்தகைய சூழ்நிலை தியானம் செய்பவர்களின் மனதுக்கு மிகவும் ஏற்றதாக இருக்கும். காலை மாலை இருவேளையும் நறுமணம் கமழும் சாம்பிராணிப் புகை இடலாம்.



கோபமோ, சச்சரவோ, தூய்மையற்ற எண்ணமோ அந்த அறையில் நிகழ்தல் ஆகாது. உங்களைப் போன்ற ஒத்த எண்ணமுடையவர்களை மட்டுமே அந்த அறையில் புக விடுங்கள். படிப்படியாக அந்த அறை புனிதத்தன்மை பெறும். துன்பத்தினாலும் சந்தேகத்தினாலும் மனம் கலங்கும்போது

அந்த அறையில் நுழைந்தால் மன அமைதியைக் காண்பீர்கள். இந்தக் காரணம் பற்றியே, புனிதச் சூழ்நிலையை உண்டாக்கக் கோயில்கள் ஏற்பட்டன. சில கோயில்களில் அவ்விதப் புனிதச் சூழ்நிலை அழிந்திருக்கக் காண்கிறோம். ஒரு தனித்த அறையைத் தியானத்திற்காகச் சீர்படுத்தி வைக்க இயலாதவர்கள் விரும்பிய இடத்தில் தியானப் பயிற்சியைச் செய்யலாம்.

தியானம் தவிர்க்க வேண்டிய இடம்

நெருப்பும் நீரும் உள்ள இடமும், உலர்ந்த சருகுகள் சிதறிக் கிடக்கும் இடமும், எறும்புப் புற்று உள்ள இடமும், காட்டு மிருகங்கள் நடமாடும் இடமும், நாற்சந்திகள் கூடும் இடமும், சந்தடி மிகுந்த இடமும், தீயவர் உள்ள இடமும் தியானப்பயிற்சிக்கு ஏற்றவை யல்ல. மேலும், உடல் சோம்பலுற்று அல்லது நலமற்று இருந்தாலும் மனம் துன்புற்று அல்லது கவலையுற்று இருந்தாலும் யோகம் பயிலக் கூடாது.



தியானம் செய்ய ஏற்ற இடம்

மறைவானதும், மக்கள் கூட்டம் இல்லாததும், அழுக்கற்றதும், அழகான இயற்கைக் காட்சிகளையுடையதுமான இடத்தைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் வீட்டிலுள்ள அமைதியான, அழகிய அறையைத் தேர்ந்தெடுப்பதும் நன்று. பண்டைக்கால யோகிகளையும், குருவையும், கடவுளையும் வணங்கிவிட்டுத் தியானப் பயிற்சியைத் தொடங்குக.

தியானத்திற்குத் தகுந்த காலம்

தினமும் இரு முறையாவது தியானம் பயில வேண்டும். காலையும் மாலையும் பயில்வதற்குச் சிறந்த நேரங்கள். இரவு முடிந்து பகல் தொடங்கும்போதும், பகல் முடிந்து இரவு தொடங்கும்போதுமுள்ள சந்திக்காலங்களில் ஓரளவு அமைதி நிலவுகிறது. அந்தக் காலங்களில் உடலும் உள்ளமும் அமைதி பெறும் தன்மையுடையன. இந்த இயற்கைச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, பயிற்சியைத் தொடங்க வேண்டும். பயிற்சி முடிந்த பிறகு தான் உணவு உட்கொள்ள வேண்டும் என்ற விதியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

இவ்வாறு செய்தால், பசியின் தூண்டுதலால் சோம்பல் பறந்துபோகும். கடவுள் வழிபாடு செய்வதற்கு முன்பு, உணவு அருந்துதல் கூடாது என்று நம் நாட்டில் சிறுவர்களைப் பயில்விப்பது வழக்கம். சிறிது காலத்திற்குப் பின் இந்தப் பழக்கம் இயற்கையாக அமைந்து, குளித்து வழிபாடு செய்வதற்கு முன் சிறுவர்களுக்குப் பசி தோன்றாது.

வழிபாடு

தியானத்திற்கு ஏற்பாடு செய்துள்ள இடத்தில் அமர்ந்து பின்கண்டவாறு வழிபாடு செய்வது நலம்.

எவ்வுயிரும் இன்புற்று இருக்க.
எவ்வுயிருக்கும் அமைதி நிலவுக.
எவ்வுயிரும் ஆனந்தம் பெறுக.
எல்லாத் திசைகளிலுமுள்ள உயிர்களும்
இவற்றைப் பெறுக

இவ்வாறு பல தடவை மனதில் ஜபித்தால் நீங்களும் நலத்தை அடைவீர்கள். உங்கள் நலத்தையும் இன்பத்தையும் எளிதில் பெருக்கும் வழி, பிறர் இன்புற்றிருக்க உதவுவது தான் என்பதை நாளடைவில் அறிந்து கொள்வீர்கள். இதற்குப் பின் கடவுளிடம் நம்பிக்கை கொண்டவர்கள் பணத்திற்காகவோ, உடல்நலத்திற்காகவோ, சுவர்க்

கத்திற்காகவோ அல்லாமல், ஞானத்தைப் பெறுவதற்காகவே பிரார்த்தனை செய்க. மற்றவை சுயநலம் ஆகும்.

தியானத்தில் முதற் பாடம்

ஆசனத்தில் அமர்ந்து, மனதை அதன் வழியே செல்ல விட்டு, பொறுத்திருந்து கவனிக்கவும். 'அறிவே ஆற்றல்' என்பது பழமொழி. அதற்கிணங்க, மனது என்ன செய்கிறது என்று தெரிந்தாலன்றி அதனை அடக்க இயலாது. அதன் கடிவாளத்தைத் தளர்த்தி விடுக. கொடிய எண்ணங்கள் மனதில் எழும். அத்தகைய எண்ணங்கள் உங்கள் மனதில் இருப்பதைக் காண நீங்களே வியப்படைவீர்கள். நாட்கள் செல்லச் செல்ல, மனதின் சீரற்ற எண்ண அலைகள் குறைந்துகொண்டே வந்து, மனம் சிறிது சிறிதாக அமைதி பெறுவதைக் காணலாம்.

வீண்வாதங்களையும், மனதைச் சிதறச் செய்யும் பேச்சுக்களையும் தவிர்க்கவும். புத்தி சாதுரியமான வெற்றுப் பேச்சினால் பயன் கிடைக்குமா? அது மனதின் சமநிலையை இழக்கச் செய்து மனதைக் குழப்பிவிடும். உயர்நிலைகளில் உள்ள பயன்களைப் பெறல் வேண்டும். வீண் பேச்சினால் அவை கிடைக்குமா? ஆதலால் வீண்பேச்சை விடுக. ஆன்மஞானம் அடைந்தவர் எழுதிய நூல்களையே படியுங்கள்.

தியானத்தில் சில பாவனைகள்

சிரசின் உச்சிக்கு அப்பால் சிறிது தூரத்திலேயே ஒரு தாமரை இருப்பதாகக் கருதி, அதன் மையத்தை நற்குணமாகவும், காம்பை ஞானமாகவும் கருதுங்கள். அந்தத் தாமரையின் எட்டு இதழ்களும் ஒரு யோகி பெறுவதற்கு உரிய அஷ்ட மாசித்திகள் என்றும், உள்ளே உள்ள கேசரங்களையும் சூலகத்தையும் இந்தச் சித்திகளைத் துறக்கும் பெரும் தியாகம் எனவும் நினையுங்கள்.

அந்தத் தாமரையின் உள்ளே பொன்னொளி பெற்றவராய், அறிதற்கு அரியவராய், சர்வ வல்லமை பெற்றவராய், ஓங்காரம் என்னும் பெயர் உடையவராய், சொல்வதற்கு அரியவராய், பேரொளியால் சூழப்பெற்ற உங்கள் இஷ்டதெய்வத்தை மனதினில் தியானியுங்கள்.

தியானத்திற்கு மற்றும் ஓர் உபாயம் கூறப்படுகிறது. உங்கள் இதயத்தில் ஒரு சிறு இடைவெளி (அம்பலம்) இருப்பதாகவும், அதில் ஒரு சுடர் எரிவதாகவும், அந்தச் சுடரே உங்கள் ஆன்மாவுக்கு ஆன்மாவாகிய கடவுளென்றும் நினைத்து அதைத் தியானியுங்கள்.

கடினமாகப் பயிற்சி செய்க. பயனைக் கருதாமல் பயிற்சியைத் தொடங்கி உறுதியுடன் செயற்பட்டால் நீங்கள் ஆறே மாதத்தில் பூரண யோகியாகிவிடலாம். மற்ற விஷயங்களுள் ஒவ்வொன்றிலும் சிறிது சிறிதாகப் பற்றி நிற்பவர் முன்னேற்றம் காணார். வெற்றி பெறப் பொறுமையும் அளவில்லாத மனத்திடமும் வேண்டும்.

மனதை அடக்கி வெற்றி காணல்

அலைகிற மன எண்ணங்களைத் தியானத்தினால் அடக்கிவிட முடியும். அப்போது தாமஸ குணமும் ரஜோகுணமும் நீங்கி, முற்றிலும் சத்துவ குணமுடைய இயல்பைப் பெறுவீர்கள். நீண்ட காலத் தியானத்தினால் நீங்கள் கருதாமலே கோபத்தையும் பகைமையையும் அடக்கித் தடுத்து விடுவதைக் காண்பீர்கள்.

நீங்கள் சமய ஒழுக்கம் பெற்று விட்டதற்கு முதல் அறிகுறி மகிழ்ச்சியடைந்திருப்பதாகும். யோகிக்கு அனைத்தும் இன்பத்தையே தருபவை. காணும் ஒவ்வொரு முகமும் அவனுக்கு மகிழ்ச்சியே தரும். நற்குணமுடையவனுக்கு அதுவே அறிகுறி.

சாதகன் யோகியாதல்

சாதகன் தியானப் பயிற்சியினால் படிப்படியாகத் தன் கீழான எண்ணங்களை விட்டு, உள்நனவு நிலையிலிருந்து நீங்கி, உயர் நனவு நிலையை அடைகிறான். இதையே கீதையில்

கண்ணன் கூறுகிறான் : ''எவன் எவ்வுயிரிடத்தும் பகைமை இல்லாதவனாய், நட்புப் பூண்டவனாய், கருணையுடையவனாய், என்னுடையது என்ற எண்ணம் இல்லாதவனாய், இன்பத்தையும் துன்பத்தையும் சமமாகக் கருதுபவனாய், பொறுமையுடையவனாய், எப்பொழுதும் மகிழ்ச்சி பெற்று இருப்பவனாய், யோகத்தில் விருப்பமுடையவனாய், அடங்கிய மனத்தினனாய், திடமான சித்தம் உடையவனாய், புத்தியையும் என்னிடம் அர்ப்பணம் செய்தவனாய் உள்ளவனோ, அவனே என் பக்தன். எவனிடமிருந்து உலகம் துன்பம் பெறுவதில்லையோ, எவன் மகிழ்ச்சி, சினம், அச்சம், மனக்கிளர்ச்சி இவற்றினின்று விடுபட்டவனோ அவன் எனக்குப் பிரியமானவன். எவன் எதையும் விரும்பாதவனாய், தூயனாய், சுறுசுறுப்பு உடையவனாய், துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் பொருட்படுத்தாதவனாய், ஒரு பொழுதும் துயரப்படாதவனாய், தனது நலனைப் பெருக்குவதற்கு முயற்சி விட்டவனாய், இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் சமமாகக் கொள்பவனாய், மௌனியாகவும், ஆழ்ந்த சிந்தனை உடையவனாய், கிடைத்ததைக் கொண்டு திருப்தி பெற்றுக் களிப்புடன் இருப்பவனாய், வீடு வாசல் இல்லாதவனாய், யாதும் தன் ஊரே, உலகமே தன் வீடு என்று நினைப்பவனாய், தன் கொள்கையில் திடசித்தம் உள்ளவனாய் இருக்கிறானோ அவனே எனக்குப் பிரியமான பக்தன்'' என்று கீதையில் கண்ணன் கூறியபடி காணப்படும் மனிதனே யோகியாகத் தகுதியுள்ளவன்.

இவ்வாறு தியானத்தின் ஆற்றலைப் பெற்ற யோகியே இயற்கையை ஆளும் சக்தியைப் பெறுகிறான். ∴

ராமதீர்த்தரின் துணைவன்

சுவாமி ராமதீர்த்தர் ஜப்பானிலிருந்து அமெரிக்காவுக்குக் கப்பலில் சென்றுகொண்டிருந்தார். ஸான்பிரான்ஸிஸ்கோ துறைமுகத்திற்குக் கப்பல் வந்ததும் எல்லாரும் கப்பலை விட்டு இறங்கினார்கள். ஆனால் ராமதீர்த்தர் கப்பலை விட்டு இறங்க மனமில்லாதவர்போல் கப்பலின் மேல்தளத்திலேயே நின்றுகொண்டிருந்தார்.

இதைக் கண்ட ஓர் அமெரிக்கன் அவரைப் பார்த்து, ''உங்கள் சாமான் எங்கே? ஏன் கப்பலை விட்டு இறங்கவில்லை?'' என்று கேட்டான்.

சுவாமி ராமதீர்த்தர், ''என் உடலில் இருக்கும் ஆடைதான் என் சாமான். அதைத் தவிர எனக்கு வேறு ஒரு சாமானும் கிடையாது'' என்றார்.

''ஆமாம், உங்கள் பணத்தை எங்கு வைத்திருக்கிறீர்கள்?''

''நான் ஒரு பணமும் வைத்துக்கொள்ளவில்லை.''

''அப்படியானால் உங்கள் சாப்பாடு?''

''உலகம் முழுவதும் எனக்குச் சொந்தம். அப்படியிருக்க என் சாப்பாட்டைப்பற்றி என்ன கவலை? யாராவது கொடுத்தால் சாப்பிடுகிறது; இல்லாவிட்டால் பேசாமலிருக்கிறது.''

''அமெரிக்காவில் உங்களுக்குத் தெரிந்தவர் யாராவது இருக்கிறார்களா?''

''ஒரே ஒருவர் இருக்கிறார்.''

''யார் அவர்?''

''நீங்கள்தான்'' என்று சொல்லி ராமதீர்த்தர் அந்த அமெரிக்கனின் தோள்மீது அன்பாகக் கையை வைத்தார். ராமதீர்த்தரின் பற்றற்ற தன்மையைக் கண்டு அந்த அமெரிக்கன் வியந்தான்.

ஆன்மிக உரையாடல்

ஜூலை-8

சுவாமி துரியானந்தர்: கெட்ட சக்திகளின் பிடிப்புகள் ஒரு முறை மனதைத் தன் பிடிப்பில் கொண்டு வந்துவிட்டால் பின்னர் அவற்றிலிருந்து விடுபடுவது மிகவும் சிரமமாகிறது.

புலனடக்கத்தின் நற்பயனைப் பற்றியும், புலனடக்கமின்மையின் தீமையைப் பற்றியும் இளைஞர்களுக்கு உறுதி ஏற்படுத்தப்பட்டுவிட்டால் அதன் பின்பு அவர்கள் திருமணம் செய்துகொண்டு, கௌரவமான குடிமக்களாக வாழலாம்.

ஆன்மிக மனப்போக்குக் கொள்பவர்கள் சபலங்களுக்கு ஆட்படுவதில்லை. ஏனெனில் புலனடக்கமே ஆன்மிகத்தின் அடிக்கல்லாகும். புலனடக்கம் பெற்றவராக இருந்தாலன்றி ஒருவரது மனம் ஸ்திரமாக நிற்பதில்லை.

''உடல் பஞ்ச பூதங்களால் ஆனது, எண்ணத்தால் அலைக்கழிக்கப்படுவது. மனதின் சரக்கு (எண்ணத்தின் மூலமான சித்தம்) சஞ்சலமாக்கப்பட்டால் பஞ்ச பூதங்கள் நாசமாக்கப்படுகின்றன. எனவே அதை ஜாக்கிரதையாகப் பாதுகாக்க வேண்டும். ஸ்திரமாக நிலைநிற்கிற சித்தம் மட்டுமே தெளிவான அறியும் திறனை ஏற்படுத்த முடியும்.'' (அவதூத கீதை.)

நம் உடலிலுள்ள பூதங்களில் சிறந்தது புலனடக்கத்தாலேயே போஷிக்கப்படுகிறது. புலனடக்கம் இல்லாவிட்டால் சித்தம் ஸ்திரமின்றி அலைபாய்கிறது. அதன்பின் இஷ்ட தெய்வத்தின் உருவம் சித்தத்தில் தெளிவாகப் பிரதிபலிக்க முடிவதில்லை. ஸ்ரீராமகிருஷ்ணர், ''பாதரசப் பூச்சுச் சரியாக இருந்தால் கண்ணாடி தெளிவாகப் பிரதிபிம்பம் காட்டுகிறது; பாதரசப் பூச்சுச் சிதைந்திருந்தால் பிரதிபிம்பம் குறைபாடுள்ளதாக இருக்கிறது'' என்று சொல்வது வழக்கம்.

மனச் சரக்கான சித்தம் என்பது என்ன? எண்ணத்தைப் பிறப்பிப்பது எதுவோ அது தான். விஷயங்கள் முதலில் பதிவாவது அங்கேதான். எனவே எண்ணத்தின் இந்த மூலஸ்தானமே கலக்கப்பட்டால் அதன்பின் தியானம் புரிவதென்ற கேள்விக்கே இடமில்லை என்பது தெளிவு.

'சித்தம், மனம், புத்தி' என்று சும்மா படித்துக்கொண்டே போகிறோம். இவற்றில் எது என்ன என்பதை அறிந்துகொள்வதற்கு ஒருவர் உள்ளுக்குள்ளே ஆழ்ந்து குடைந்து பார்க்க வேண்டும். ஏற்கனவே சித்தத்தில் கெட்ட விஷயங்கள் பதிந்துவிட்டிருந்தால் தப்புவது கடினம். இதனால்தான் கீதையில் பகவான், ''அர்ஜுனா! எனவே முதலில் புலன்களைக் கட்டுப்படுத்து. பாவியான காமத்தைக் கொல்லு. அதுதான் அறிவு அனுபவம் ஆகிய இரண்டையும் அழிப்பது'' என்கிறார்.

''வெளிச் செல்லும் செயற்பாட்டைக் கொண்ட மனம் (வெளிச் செல்லாத, ஸ்திரமான) லட்சிய நிலையிலிருந்து மிகச் சிறிதே விலகுவதற்கு விட்டுவிட்டாலும், படிவரிசையின் உச்சியில் கவனக் குறைவால் கைதவற விட்ட விளையாட்டுப் பந்து ஒவ்வொரு படியாக எகிறிக் குதித்தபடி கீழே போய்விடுவது போல, கீழே கீழே சென்றுவிடுகிறது.'' (விவேக சூடாமணி.) அடாடா! அதுதான் எப்படி வீழ்ச்சியின் கடைசி எல்லைக்குப் போகிற வகையில் கீழே கீழே செல்கிறது!

கேள்வி கேட்பவர்: இடைவிடாமல் பன்னிரண்டு ஆண்டுகள் வழுவாத புலனடக்கம்

பயில்வதனுல் ஒருவர் பிரம்மஞானம் அடைவாரா?

சுவாமி துரியானந்தர்: சந்தேகமில்லாமல்! ஆன்மிகச் சக்தியாக மாற்றப்பட்ட பௌதிக சக்தியான ஓஜஸ்ஸின் ஆற்றலால் பிரம்ம ஞானம் தன்னைத் தானே மலர்வித்துக்கொள்கிறது. அந்த ஞானம் எப்போதுமே இருப்பது தான். இதழ் மூடியுள்ள அதை நாம் மடலவிழ்த்துக்கொள்ள மட்டுமே வேண்டும். பன்னிரண்டு ஆண்டுகள் ஒருவரால் பிரம்மசரியம் காக்க முடிந்துவிட்டால் மனம் ஸ்திர நிலையுடன் நிற்கிறது; இதன் விளைவாக ஞானம் தன்னை மடலவிழ்த்துக் கொள்கிறது. சுவாமிஜி உலகையே புரட்சியில் திருப்பி விட்டாரெனில் அது இந்தச் சக்தியின்றி வேறு எதன் துணையில்? கேசவசந்திர சேனரைப் பற்றி ஸ்ரீராமகிருஷ்ணர், "கேசவ் மட்டும் உலகைத் துறந்திருந்தால் இன்னும் எவ்வளவோ பணி செய்திருக்க முடியும்" என்பார்.

சுவாமிஜி எங்களிடம், "நான் வெறும் சொற்பொழிவை மட்டும் செய்கிறேன் என்ரு நினைக்கிறீர்கள்? நான் அவர்களுக்கு (சொற்பொழிவைக் கேட்பவர்களுக்கு) ஸ்தூலமாக ஏதோ ஒன்றைக் கொடுக்கிறேன் என்று அறிவேன்; அவர்களுக்கும் தாங்கள் ஸ்தூலமாக எதையோ பெறுகிறோம் என்று தெரியும்" என்று கூறுவார்.

நியூ யார்க்கில் சுவாமிஜி ஒரு வகுப்புக்கு விரிவுரையளித்துக் கொண்டிருந்தார். ஆகா, அதன் மகோன்னத சக்தி! அதைக் கேட்கும் போது தியான காலத்தில் போல ஏதோ ஒரு சக்தி தமது குண்டலினியைத் தூக்கிவிடுகிற மாதிரி உயர்ந்ததாகக்கே கூறினர். விரிவுரை முடிந்தபின் (அதற்கு ஒரு மணிநேரம் பிடித்ததாம்) தாம் வினு-விடை வகுப்பு நடத்துவதாக, கே அறிவித்தார். விரிவுரை ஆனவுடனே சொற்பொழிவைக் கேட்க வந்தவர்களில் பெரும்பாலோர் போய்விட்டார்கள். சுவாமிஜி, "இதற்கப்புறம் ஒரு வினு-விடை வகுப்பு! என் சொற்பொழிவின் பலனைப் பாழாக்க நீ ஆசைப்படுகிருயா?" என்று கடிந்து கொண்டாராம். சற்றே பாருங்கள்! சுவாமிஜியிடம் ஸ்ரீராமகிருஷ்ணர் உலகுக்கென்று எப்பேர்ப்பட்ட சக்தியை விட்டுப் போயிருக்கிருர்! அவர் (சுவாமிஜி) உலகின் கருத்தோட்டத்தையே மாற்றிவிடவில்லை? எதுவும் கவர்ந்திழுக்கவொண்ணுத அவரது வலிமையை நினைத்துப் பாருங்கள்.

ஒரு பிக்ஷு என்னிடம் வெளிப்படையாகச் சொன்னுர்: பதினெட்டு ஆண்டுகளாக அவர் வேதாந்தத்தை மென்றுகொண்டிருந்தாராம். ஆனுலும் காமத்தின் சபலத்துக்கு மேல் அவரால் எழும்ப முடியவில்லையாம். அவரது மனம் அதில் ஒரு விருப்பத்தை வளர்த்துக் கொண்டுவிட்டது என்பது நிதரிசனம். விஷய வாசனைகளை அடியோடு அழிப்பது, மலை மேல் பாரமேற்றிப் போகிற காரியம். ஆயினும், ஒரு சமயத்தில் நான் ஏதோ ஒரு தவறு செய்துவிட்டேன் என்பதால் என்ன? இப்போது அது என்ன என்று அறிகிறேன்; எனவே இனி ஒருபோதும் அப்படிச் செய்ய மாட்டேன் என்று சொல்கிற சங்கற்ப உறுதி ஒருவருக்கு இருந்தால் அவர் தப்பி முன்னேற முடியும். சந்நியாசிகளைப்பற்றி சுவாமிஜி கூறும்போது, "ஒரு சன்னியாசியின் எல்லாத் தவறுகளையும் மன்னித்துவிடலாம்; ஆனுல் பிரம்மசர்ய பங்கம் மட்டும் மன்னிக்க முடியாதது. அவன் கடும் புலனடக்க நெறி கொண்டவனுக இருக்க வேண்டும்" என்பார். சுவாமிஜி பெண்மணிகளிடையே — அழகு வாய்ந்த, செல்வம் மிக்க, திறன்கள் பெற்ற பெண்மணிகளிடையே—பழகி வாழ்ந்திருக்கிருர். ஆனுல் எவரும் அவரைக் கவர்ந்திழுக்க முடியவில்லை. அவர்தாம் அவர்களைத் தம்மிடம் ஈர்த்துக்கொண்டார் என்று சொல்ல வேண்டும். உங்களால் இந்த நிலையை நினைத்தாவது பார்க்க இயலுகிறதா? ∴

சிரித்துக்கொண்டே தீமை செய்தவன் அழுதுகொண்டே அதன் தண்டனையை அனுபவிக்க வேண்டி ஏற்படும்.

—ஓர் அறிஞர்

புதிய புத்தகங்கள்

1. திரு அருட்பா

திரு அருட்பிரகாச வள்ளலார் அருளியவை அனைத்தும் மூன்று தொகுதிகளில் வெளியிடப் பட்டுள்ளன. முதல் ஐந்து திருமுறைகள் ஒரு தொகுதியாகவும், ஆறும் திருமுறை ஒரு தொகுதியாகவும், உரைநடைப் பகுதி ஒரு தொகுதியாகவும் பிரித்து மூன்று பாகங்கள் வெளியிட்டுள்ளார்கள்.

[வெளியிட்டோர்: இராமலிங்கர் பணி மன்றம், 31, போயசு தோட்டம், சென்னை-600 086. சுமார் 700 பக்கங்கள் கொண்ட ஒரு தொகுதியின் விலை ரூ. 50. மூன்று தொகுதிகளும் சேர்ந்து விலை ரூ 150]

2. நாராயணீயம்

குருவாயூரப்பனின் லீலைகளை விளக்கி மேல்ப்பத்தூர் பட்டதிரி அருளிய நூல் இது. சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய இரண்டு மொழி களிலும் மூலம் கொடுக்கப்பட்டுத் தமிழில் பொருளுரையும் தரப்பட்டிருக்கிறது. முதல் பாகம் இப்போது வெளிவந்துள்ளது. இரண் டாம் பாகம் விரைவில் வெளிவர இருக்கிறது.

[உரை ஆசிரியர்கள்: எம். எஸ். விஜய ராகவன், வி. ஆர். வேங்கடதீட்சிதர். வெளியிட்டோர்: கிரி டிரேடிங் ஏஜென்சி, 10, திரு கபாலீசுவரர் சன்னிதித் தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004. பக்கம் 232. விலை ரூ. 22]

3. உபாசனை வழிகாட்டி

பொதுவாகப் புத்தகங்களிலிருந்து தெரிந்து கொள்ள இயலாத உபாசனை பற்றிய ரகசியங்களைக் கொண்ட அரிய நூல் இது. ஹிந்துக்கள் அனைவருமே படிக்க வேண்டிய, அதிலும் குறிப்பாகச் சாக்தர்கள் படிக்க வேண்டிய அற்புத நூல் இது.

[ஆசிரியர்: ஸ்ரீதுர்க்கை சித்தர். வெளி யிட்டோர்: பைலட் பப்ளிகேஷன்ஸ், 6, நல்லதம்பி செட்டி தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600 002. பக்கம் 96. விலை ரூ. 5]

4. ஒரு கோபியின் இதயம்

பிருந்தாவன கோபியின் இதயத்தைப் படம் பிடித்துக் காட்டும் இந்த நூலை 'த்யாப்ஜி' என்ற ஓர் அதிசயப் பெண்மணி எழுதியுள்ளார். இந்த நூலில் கிருஷ்ணபக்தி என்ற அமுத வெள்ளம் பொங்கிப் பெருக் கெடுத்திருக்கிறது.

[தமிழாக்கம்: ஹரிணி. வெளியிட்டோர்: ஹரி கிருஷ்ண சதனம், 3, அப்பாகண்ணு முதலி தெரு, சென்னை 600 014. பக்கம் 106. விலை ரூ. 5. தபால் செலவு தனி]

5. ஸத்தர்சனம்

பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் அருளிய உள்ளது நாற்பதன் அநுவாதமாய் வாஸிஷ்ட கணபதி முனிவர் இயற்றிய ஸத்தர்சனம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூலில் பாரத் வாஜ கபாலியின் பாஷ்யமும் இடம் பெற் றுள்ளது

[தமிழாக்கம்: பாரத்வாஜ விசுவநாதன். வெளியிட்டோர்: ஸ்ரீரமணாச்ரமம், திருவண்ணா மலை-606 603. பக்கம் 98. விலை ரூ 4]

6. ஸ்ரீரமண சரிதச் சுருக்கம்

ஸ்ரீரமண மகரிஷியின் வரலாறும் உபதேசங் களும் சுருக்கமாக இந்த நூலில் தரப்பட்டிருக் கின்றன. திருவண்ணாமலை, ஸ்ரீரமணாச்ரமம் இந்த நூலை வெளியிட்டுள்ளது. பக்கம் 54. விலை ரூ. 1-50.

7. ஸ்ரீரமண கீதை

ஸ்ரீரமண மகரிஷியின் உபதேசங்கள் ஸ்ரீரமண கீதையாக வெளிவந்துள்ளன. திருவண்ணாமலை, ஸ்ரீரமணாச்ரமம் இந்த நூலை வெளியிட்டுள்ளது. பக்கம் 54. விலை குறிப் பிடப்படவில்லை.

8. ஸ்ரீமஹாசாஸ்தா த்ரிசதீ

சபரிமலை ஐயப்பனைக் குறித்த ஸ்தோத் திரம், நாமாவளி ஆகியவை பாஷ்யத்துடன் வெளியிடப்பட்டுள்ளன. மயிலாப்பூர், கிரி டிரேடிங் ஏஜென்சி இந்த நூலை வெளியிட் டுள்ளது. பக்கம் 60. விலை ரூ 3.

ஸ்ரீராமபிரானின் அருளுரை

1. உடலுக்கு நேரும் வயோதிகம் என்ற நிலையை வென்றவன் எவனும் இல்லை. மனிதனுடைய ஆசை எதுவும் நிறைவேருத படி வயோதிகம் செய்துவிடுகிறது மாலை நேரத்தைத் தொடர்ந்து இருள் சூழ்வதைப் போல, வயோதிகத்தைத் தொடர்ந்து மரணம் வருகிறது.

2. மகரிஷியே! உடலின் உள்ளும் புறமும் இருக்கும் எல்லாப் பொருள்களையும் ஆராய்ந்து பார்த்து, இந்த உடலில் நல்லது என்று கொள்ளக் கூடியது ஏதாவது ஒன்றேனும் இருக்கிறதா என்பதை எனக்குச் சொல்லுங்கள். மனிதன் செத்த பிறகு அவனுடன் கூடவும் செல்லாத இந்த உடலின்மீது எவனுவது நம்பிக்கை வைக்கலாமா?

3. குழந்தைப் பருவத்தில் வேடிக்கையிலும் களியாட்டத்திலும் காலம் கழிந்து போய்விடுகிறது. அந்தச் சமயத்தில் மனம் சிறிதுகூட அமைதியின்றி அலைகிறது. வாலிபப் பருவத்திலோ மக்கள் புலனின்பங்களை நாடித் திரிகிருர்கள். ஆகவே அப்போதும் சாந்தி பெறுவதற்கு வழியில்லை. மூப்பு வந்ததுமே உடல் நோய்வாய்ப்பட்டு க்ஷீணிக்க ஆரம்பித்துவிடுகிறது. இந்த வயோதிக நிலையில் மனிதன் துன்பங்களையும் துயரங்களையும் மட்டுமே அனுபவிக்கிருன்.

4. பனி விழுந்து வாடிப்போன தாமரையை விட்டு ஓடி விடுவதுதான் தேனீயின் இயல்பு. அதுபோலவே, கொடிய நோயும் மூப்பும் இந்த உடலை வந்து தாக்கும்போது உயிராகிய தேனீ இதை விட்டுப் பறந்து போய்விடுகிறது. உலகமாகிய ஏரியும் முற்றிலும் வற்றிப்போகிறது.

5. உடல் எளிதில் அழியத் தக்கது, மாறுதல்களுக்கு உள்ளாகக்கூடியது. அதில் உள்ள குடல்களும் நரம்புகளுமோ மிகச் சிக்கலான அமைப்பு உடையவை. இந்த உடல் ஓய்வு ஒழிச்சலில்லாத துன்பங்களுக்கு இருப்பிடமாகும்.

6. உடல் பௌதிகமயமான ஜடப் பொருளே ஆகும். என்ருலும் சைதன்யத்தின் சாயல் அதில் இருப்பதாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம், பஞ்ச கோசங்களுடன் கூடிய ஆத்மா உடலில் குடியிருப்பதுதான்.

7. இந்த உடல், மோகத்தில் அழுந்தியிருக்கும் ஜீவாத்மாவின் இருப்பிடமாக விளங்குகிறது. எது நித்தியம், எது அநித்தியம் என்பதைப் பாகுபடுத்தத் தெரியாத நிலையில் அது திண்டாடுகிறது. மக்களை அவித்யையாகிய குழியில் தள்ளுவதற்கே அது பயன்படுகிறது. மிகவும் சின்னஞ்சிறிய ஒரு தூண்டுதல் கிடைத்தால் போதும், அது உடனே மகிழ்ச்சி கொண்டு பூரிக்கிறது அல்லது கண்ணீர் மல்கித் துன்பப்படுகிறது. இந்த உடலைப் போன்று அருவருப்புக்கு இடமான, பரிதாபத்திற்கு உரிய, நல்ல அம்சம் எதுவுமே இல்லாத வேறொரு பொருளைப் பார்க்க இயலாது.



8. உடலின் இயல்பு, நிலையாமையே ஆகும். என்ருலும், மோட்சம் பெறுவதற்கு உதவுகிற தகுதி உடலுக்கு இருக்கிறது. ஆகவே, மற்றச் சாதாரணப் பௌதிகப் பொருளைப் போன்றதுதான் என்று உடலைத் தள்ளி விடவும் முடியாது; முற்றிலும் சைதன்யம் பொருந்திய பொருள் என்று அதைக் கொள்ளவும் முடியாது.

9. உடல் ஒரு மரம் போன்றது. இந்த மரத்தில் அகங்காரம் என்னும் கழுகும், விருப்பங்களாகிய பாம்பும், கோபமாகிய காக்கையும், புலன்களாகிய வேறு பறவை

களும் வாழ்கின்றன. மேலும், இந்த மரத்தின் அடிப்பாகத்தில் கெட்டியாகப் பின்னிப் படர்ந்திருக்கும் தாவரத் தொகுதி போன்று, பலவிதமான ஆசைகளும் வரிசை வரிசையாகச் சூழ்ந்து மண்டியிருக்கின்றன.

10. விருப்பமும் அபிலாஷையுமாகிய குழியில் செயலற்றுக் கிடக்கும் ஆமை போன்றது மனித உடல். குழியிலிருந்து வெளியேற அந்த ஆமை முயற்சி எதுவும் செய்வதில்லை.

11. இந்த உலகம் என்ற சமுத்திரத்திலே ஏராளமான உடல்கள் மிதந்து சென்றபடி இருக்கின்றன. இவற்றுள் ஒருசில ஞானத்தையும் விவேகத்தையும் ஏற்றுக் கிரகித்துக் கொள்ளும் சக்தி வாய்ந்தவை. அவற்றையே மனித உடல்கள் என்று சொல்கிறோம்.

12. 'எனக்கும் உடலுக்கும் சம்பந்தம் கிடையாது. உடலும் நானும் ஒன்று அல்ல' என்று தீர்மானித்து அமைதி பெறுகிறவன் உண்மையிலேயே மிகவும் சிறந்தவன் ஆவான்.

13. அறியாமை மிகுந்திருக்கும் இளமையிலே மனம் சஞ்சலப்பட்டுத் திரிகிறது. அத்தகைய மனதின் பலவிதமான விளையாட்டுப் போக்குகளுக்கு இளைஞர்கள் பலியாகி விடுகிறார்கள். ஆகவே அவர்கள் ஒரு துன்பத்திற்குப் பிறகு மற்றொரு துன்பம் என்று துன்பத்தையே அனுபவித்து அல்லற்படுகிறார்கள். தன்னடக்கம் இல்லாத இளைஞர்களை இதயத்தில் இருக்கும் காமப் பேய் தன் வசப் படுத்திக்கொள்கிறது.

14. இளமை என்ற பயங்கரமான காடு பலவிதமான விசித்திர ஆபத்துக்கள் நிறைந்தது. ஆபத்து எதற்கும் உட்படாமல் அந்தக் காட்டைத் தாண்டிவிடுகிற மனிதனே அமைதி நிறைந்தவன் (சாந்த புருஷன்) என்ற பெயருக்குத் தகுதி பெற்றவன் ஆகிறான்.

15. அலைகளை வீசிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு காட்டாற்றைக்கூடச் சுலபமாகக் கடந்துவிடலாம். இளமைப்பருவத்தின் ஆசைகளைத் தவிர்ப்பது சுலபமானதல்ல. விவேகம் இல்லாத ஜீவனுக்கு இளமைப் பருவமே அதோகதிக்குக் கொண்டு சேர்க்கும் காரணமாக அமைகிறது.

16. அதிர்ஷ்டம் இல்லாத மனிதனின் பிடியில் இருக்கும் இரத்தினக்கல் எப்படியோ நழுவி மறைந்து போகிறது. அது போலவே, இளமை என்ற பறவை உடலிலிருந்து மிகவும் குறுகிய காலத்தில் பறந்து போய்விடும்.

17. நிலைத்து நீடிக்காத இளமைப் பருவத்தில் பெருமையும் கவர்ச்சியும் கொண்டு திரியும் மனிதனைக் குறிப்பிடுவதற்கு ஏற்ற சரியான சொல் 'மனித மிருகம்' என்பது தான்.

18. ஹே சாதுவே! சொல்வதைக் கேள்: சங்கடங்கள் நிறைந்து கவலைக்கிடமாக இருக்கும் இளமைப் பருவத்தை எளிதில் தாண்டி க்ஷேமமாக மறுகரையை அடைந்தவர்களே வழிபாட்டுக்கு உரியவர் ஆவர். அவர்களே மனிதர் என்று அழைப்பதற்குத் தகுதி வாய்ந்தவர் ஆவர்.

19. முதலைகள் நிறைந்த கடலைக் கடந்து செல்வதுகூடச் சுலபமாக இருக்கும். ஆனால் இளமைப் பருவத்தைப் பத்திரமாகக் கடந்து போவது அவ்வளவு சுலபமானதல்ல. இளமைப் பருவம் தீமை நிறைந்ததாகவும், காமம் என்ற பயங்கரப் பேரலைகள் நிறைந்ததாகவும் இருக்கிறது.

20. மகரிஷியே, பணிவை அணிகலனாகக் கொண்டு, அன்பு முதலிய நல்லியல்புகளால் பிரகாசிக்கும் இளமையே அழகு நிறைந்த இளமையாகும். அத்தகைய குணநலன்களுடன் கூடிய இளைஞனை இந்த உலகில் காண்பது அரிதிலும் அரிது.

21. உறைபனி பெய்வது காரணமாகத் தாமரை அழிகிறது. ஆற்றங்கரையில் வளரும் மரத்தை ஆற்றுவெள்ளம் வீழ்த்தி அழித்து விடுகிறது அது போலவே முதுமையால் ஏற்படும் தளர்ச்சி காரணமாக, இளமை அழிந்து போகிறது. மூப்பு வந்ததும் மனித

உடல் எல்லா அழகும் குன்றி எவ்வளவு மோசமான அவலட்சண நிலையை அடைந்து விடுகிறது! அங்கங்கள் ஆற்றல் குலைந்து போன நிலையில் எப்படிச் சோர்ந்துவிடு கின்றன!

22. செல்வத் திருமகள் அலைகளைப் போலவே அமைதி இல்லாதவள். அவள் யாரிடமும் என்றென்றைக்குமாக நிலைத்துத் தங்குவதில்லை. திருமகள் ஒருவனிடம் தங்கி யிருப்பதைப் போலவே, இளமைப் பருவத் தின் பெருமையும் மிகவும் குறுகிய காலத் திற்கே உரியது. பெண்ணாசைக்கு அடிமை யாகி அனுபவிக்கும் இன்பம் ஒரு கனவு போன்றதே ஆகும். உன் வாழ்நாள் மிகவும் குறுகிய அளவிற்கு உட்பட்டிருக்கிறது.

23. ஒரு யுகத்திற்குப் பிறகு மற்றொரு யுகம் என்று யுகங்கள் வந்து போய்க்கொண் டிருக்கின்றன. ஆனால் காலத்தின் போக்கு எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் ஒரே ரீதியில் இருந்து வருகிறது. ஆகவே காலம் என்பதற்கு உற்பத்தி என்பதும் இல்லை, ஓட்டம் என்பதும் இல்லை, அசைவற்ற நிலை என்பதும் இல்லை.

24. தாமரைக்கு நிலவு யமனாக அமை கிறது. அது போல் மனிதனின் வாலிபப் பருவம் என்ற தாமரைக்குக் காலம் யமனாக அமைந்திருக்கிறது. யானையை அழிப்பதாகச் சிங்கம் இருக்கிறது. அது போல் மனிதனின் ஆயுள்காலத்தை அழிப்பதாகக் காலம் இருக் கிறது. உலகத்தில் இருக்கும் பொருள் எது வாக இருந்தாலும் சரி, அது சிறியதாக இருந் தாலும் சரி, பெரியதாக இருந்தாலும் சரி, காலம் அதை அழிக்காமல் தப்பவிடுவதில்லை.

25. காலம் எவராலும் புரிந்துகொள்ள இயலாத ஒரு புதிர். எத்தகைய அறி வாற்றலைக் கொண்டும் மக்கள் அதைப் புரிந்து கொள்ள முடியாது. என்றாலும் வாழ்க்கை முழுவதும் மிகவும் வெளிப்படை யாக இருப்பது காலமே ஆகும்.

26. மக்கள் வாழ்ந்து வரும் வீட்டை நெருப்பு எரித்து விடுகிறது. அது போல, மக்களின் உள்ளத்தில் பல ஆசைகளையும் அபிலாஷைகளையும் கிளப்பிவிட்டுக் காலம் மக்களை எரித்துவிடுகிறது. காலம் கொடியது. துன்பத்தால் வாடி வருந்தும் மனிதனிடம்கூட அது கருணை காட்டுவதில்லை.

27. மகரிஷியே, வாழ்க்கையை இன்பம் அனுபவிப்பதற்குரிய இடம் என்று மூடர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் அது பலவித வேதனைகளின் உறைவிடமாக இருக் கிறது. வாழ்நாள் ஓடி மறைந்தபடியே இருக் கிறது. வாலிபப் பருவம் குறுகிய கால அனு பவம். குழந்தைப் பருவமோ புத்தியே மலராமல் இருண்டு கிடக்கும் பருவம். மரணம் மிகவும் பயங்கரமானது.

28. எல்லாவற்றையும் விழுங்கிக் கபளீ கரம் செய்யும் காலத்திற்கு இரையாகாமல் தப்பக் கூடியதாக இந்த உலகில் ஒரு பொருளும் இல்லை. காலம் மிகவும் பயங்கர மானது. கண்ணுக்குப் புலனாகும் எதுவாக இருந்தாலும் அது காலத்தால் விழுங்கப் படுவது நிச்சயம். அது தன் பிடியிலிருந்து எதையுமே தப்பவிடுவதில்லை. மகான்களை யும்கூட அது விட்டு வைப்பதில்லை.

29. காலம் பிரம்மாண்டமான பரிமாணம் கொண்டது. ஒரு விநாடி நேரத்தில் அது ஒரு பொருளை ஆக்கியமைக்கும்; மறு விநாடி யில் அதைத் தூள்தூளாக்கிவிடும். தன்னை ஸ்தூலஉடல்தான் என்று நினைக்கும் ஜீவனைக் காலமானது சுவர்க்கத்திலிருந்து நரகத் திற்கும் நரகத்திலிருந்து சுவர்க்கத்திற்கும் மாறி மாறி அலைக்கழித்தபடி இருக்கிறது.

30. காலம் எல்லாவற்றையும் விழுங்கி ஏப்பமிட்டுவிடுகிறது. மக்களின் அதிர்ஷ்டம், துரதிர்ஷ்டம், மன அமைதி, மனச்சஞ்சலம், பேராசை, மோகம்—ஆகிய எல்லாமே காலத் திற்குள்தான் அடங்கியிருக்கின்றன.

31. புல்லும் புழுதியும் பெருங்கடலும் சுமேரு மலையும் இந்திர பதவியும்—எல்லாம் காலத்தின் கோலத்துக்கு உட்பட்டவையே ஆகும்.

32. மழையைப் பொழியச் செய்வதும் சந்திரனை வானத்தில் தோன்றி மறையச் செய்வதும் காலத்தின் லீலைதான். சிறுவர்கள் பந்தை உருட்டி விளையாடுவதைப் போலவே காலமும் மழையுடனும் மதியுடனும் விளையாடிக்கொண்டிருக்கிறது.

செய்திகள்

☐ ஹைதராபாத் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் டிசம்பர் 12-ஆம் நாள் 'விவேகானந்தர் பற்றிய இளைஞர் மாநாடு' சுவாமி ரங்கநாதானந்தரால் நடத்தப்பெற்றது. இதில் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

☐ ஸ்ரீராமகிருஷ்ண சேவா சங்கத்தின் சார்பாகச் சென்னையிலுள்ள சாஸ்திரி நகரில் ஜனவரி 1-ஆம் தேதி கல்பதரு திருநாள் கொண்டாடப்பெற்றது. சுவாமி நந்தானந்தர், சுவாமி தன்மயானந்தர், சுவாமி கமலாத்மானந்தர் ஆகியோர் பேசினர்.

கோவை, ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயா ஜனவரி 3-ஆம் நாள் குருபூஜையான ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி விழாவை வழக்கம் போல் விமரிசையாகக் கொண்டாடியது.

☐ ஜனவரி 3-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை வேலூரில் 'வடஆர்க்காடு மாவட்ட ஸ்ரீராமகிருஷ்ண—விவேகானந்த இளைஞர் மாநாடு' நடைபெற்றது. பிரார்த்தனை, சமய மாநாடு, மலர் வெளியிடுதல், சமுதாய மாநாடு, கலந்துரையாடல், இளைஞர்களுக்கான எதிர்காலத் திட்டங்கள் பற்றிய சொற்பொழிவுகள், பொதுக் கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகளைக் கொண்ட இம் மாநாடு காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெற்றது. கல்லூரி மாணவர்களும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் மாநாட்டில் ஊக்கத்துடன் பங்கேற்றிருந்தனர். ஸ்ரீராமகிருஷ்ண மடங்களைச் சார்ந்த சாதுக்கள் ஏழு பேர் சிறப்புரை நிகழ்த்தினர். நா. மகாலிங்கம், பகீரதன், மற்றும் பல அறிஞர்களும் மாணவர்களும் 'விவேகானந்தர் வழியில் புதிய பாரதம்' குறித்து உரையாற்றினர்.

☐ புருளியா, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாபீடத்தில் ஜனவரி 8-ஆம் நாள் ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தஜி மகராஜ் அவர்கள், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சலவைக்கல் திருவுருவச் சிலையைப் பிரதிஷ்டை செய்தார். ஜனவரி 7 முதல் 10 தேதி வரை நான்கு நாட்களுக்கு வித்யாபீடம் தனது வெள்ளி விழாவைக் கொண்டாடியது.

☐ ஒரிஸ்ஸா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய இடங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு வீடுகளையும் பள்ளிக் கூடங்களையும் கட்டித் தரும் பணியை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஏற்று நடத்தி வருகிறது.

☐ பங்களாதேஷ் : இங்கு மிஷனின் இரண்டு கிளைகளில் ஏழை எளியோருக்குத் துணிகள் விநியோகிக்கப்படுகின்றன. மூன்று கிளைகளில் பால் விநியோகிக்கப்படுகிறது. ஆறு கிளைகளின் மூலம் இலவச மருத்துவ உதவி வழங்கப்பட்டு வருகிறது.

நல்லவரோடு தோழமை கொள். அப்படிச் செய்தால் நீயும் அவர்களில் ஒருவனாகி விடுவாய்.

—வால்ட்டேர்

தன்னிடம் நல்லொழுக்கமும் நம்பிக்கையும் உள்ளவன் பிறரிடமிருந்து அபாயம் நீங்கியவனாக இருக்கிறான். எவராலும் துளைக்க இயலாத இரும்பு அங்கியை அவன் அணிந்திருக்கிறான்.

—ஓர் அறிஞர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

1982 பிப்ரவரி மாத நிகழ்ச்சிகள்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி விழா :

25-2-82 வியாழன் ஜன்மதிதி : விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன
(காலை 5 மணி முதல் 11 மணி வரை)

மாலை 7 மணிக்கு, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பற்றிய சொற்பொழிவுகள்
(மாலை வழிபாட்டிற்குப் பிறகு)

26 முதல் 28 வரை ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு மூன்று நாள் அந்தர்யோகம் நடைபெறும். காலை 5 மணி முதல் மாலை 4-15 வரை சாதனை முறையாகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும். ஆரதி, வேதபாராயணம், நாமாவளி, ஸஹஸ்ரநாம அர்ச்சனை, மடத்தின் சுவாமிஜிகளால் நிகழ்த்தப்பெறும் சொற்பொழிவுகள், பஜனை, கீதா பாராயணம், தியானம், சத்சம்பாஷணை போன்றவை அந்தர்யோகத்தின் சாதனை முறையாகும். உணவு, தங்கும் இடம் ஆகியவை மடத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்படும். இதில் கலந்துகொள்வதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 30 செலுத்த வேண்டும்.

26-2-82 வெள்ளி	சுவாமி விவேகானந்தர் தினம்—பொதுக் கூட்டம்
இரவு 7-30 மணி வரை	தலைவர் : சுவாமி ரங்கநாதானந்தர்
மாலை 6 மணி முதல்	சொற்பொழிவு : திரு பகீரதன் (இராமலிங்கம் பணி மன்றம்)
27-2-82 சனி	அன்னை ஸ்ரீசாரதாதேவியார் தினம்—பொதுக் கூட்டம்
மாலை 6 மணி முதல்	தலைவர் : சுவாமி ரங்கநாதானந்தர்
இரவு 7-30 மணி வரை	சொற்பொழிவு : திரு கி. வா. ஜகந்நாதன் (கலைமகள் ஆசிரியர்)
28-2-82 ஞாயிறு	பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தினம்—பொதுக் கூட்டம்
	தலைவர் : சுவாமி தபஸ்யானந்தர்
	சொற்பொழிவு : புலவர் கீரன்

26, 27, 28 ஆகிய மூன்று நாட்களும் முறையே விவேகானந்தர் பற்றிய திரைப்படம், ஸ்ரீராமகிருஷ்ணர் பற்றிய ஹரிகதை, சத்சம்பாஷணை ஆகியவை இரவு 8 மணி முதல் 9-30 மணி வரை நடைபெறும்.

சத் சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் (7-2-82 & 21-2-82)
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் (14-2-82)

சொற்பொழிவுகள்—தமிழ்

7-2-82 1. ஸ்ரீமத் பாகவதம்—திரு ‘அண்ணு’
14-2-82 2. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்—திரு வி ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள்
21-2-82 3. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்—திரு வி. எஸ். வி. குருஸ்வாமி சாஸ்திரிகள்

மாலை 5-30 முதல் 6-30 மணி வரை ஞாயிற்றுக்கிழமைகளில் மடத்தின் சாதுக்களால் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தப்பெறும்.

விசேஷ தினங்கள் :

8-2-82 திங்கள்	சுவாமி அத்புதானந்த ஜயந்தி
22-2-82 திங்கள்	மகா சிவராத்திரி (இரவு முழுவதும் பூஜை, பஜனை)
4-2-82 & 19-2-82	ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

வேறு சில நிகழ்ச்சிகள் :

மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமையும் மூன்ருவது ஞாயிற்றுக்கிழமையும் காலே 10 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம் : ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றம், அரக்கோணம்.

மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமைகளில் மாலே 5-30 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம் : 7, கெல்லீஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னே.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் மாலே 5-30 மணிக்கு சுவாமி விபுதானந்தர் உரை நிகழ்த்துவார். இடம் : 34/1, எண்ணூர் நெடுஞ்சாலே, சென்னே-19.

மாதந்தோறும் மூன்ருவது ஞாயிற்றுக்கிழமைகளில் காலே 9-30 மணிக்கு 'ஸ்ரீராம கிருஷ்ணரின் உபதேசங்கள்' என்ற தலேப்பில் திரு வி. ராமமூர்த்தி உரை நிகழ்த்துவார். இடம் : 8/28/F காமராஜர் நகர், திருவான்மியூர், சென்னே-41.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காலே 9-30 மணிக்கு, பெரம்பூர் அன்னதான சமாஜத்தைச் சேர்ந்த சுவாமி விவேகானந்தர் நூற்ருண்டு நினேவு மண்டபத்தில் 'ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்கள்' என்ற தலேப்பில் திரு வி. ராமமூர்த்தி உரை நிகழ்த்துவார்.

எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலே 4-15 மணிக்கு சுவாமி ராகவேசானந்தர் அவர்கள் சௌந்தர்ய லஹரி பாராயணமும் 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்' என்ற தலேப்பில் சொற்பொழிவும் நிகழ்த்துவார். இடம் : 18, 9வது லேன், சாஸ்திரி நகர், சென்னே.

அனேவரையும் அனேத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிரேம்.

தலேவர்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
சென்னே-600 004

தொலேபேசி
71231

ஆசிரியர் 'அண்ணு' உரை எழுதிய எங்கள் நூல்கள்

நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை, பொழிப்புரைகளும்
விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன.

I. உபநிஷதங்கள்

	ரூ.	பை
ஈச-கேன-கட உபநிஷதங்கள்	3	00
காலிகோ	5	00
ப்ரச்ன-முண்டக-மாண்டூக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 172)	5	00
தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91)	3	00
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் ஸாரம் ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்ருவது பதிப்பு) பக்கம் 320	6	00
காலிகோ	9	00
மஹா நாராயண உபநிஷத்து (தைத்திரீய நாராயணவல்லி) பக்கம் 146	5	00

II. பகவத்கீதை

	ரூ.	பை
ஸ்ரீமத் பகவத்கீதை	14	00
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	00
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்)	3	00
பாக்கட் சைஸ்		

III வேதநூல்களும் பிரயோகங்களும்

	ரூ.	பை
விவேகசூடாமணி	14	00
ஸ்ரீருத்ரம்-சமகம் (மஹந்யாஸத் துடன்-பக்கம் 296)	7	00
காலிகோ	10	00
தைத்திரீய மந்த்ரகோசம் :—		
தமிழில் ஸ்வரத்துடன்	8	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல்பாகம்	4	00
ஷெ இரண்டாம் பாகம்	4	50
தேவீ பாகவத ஸாரம் முதல் பாகம் சாதா பைண்டு	15	00
அட்டை ,,	20	00
தேவீ பாகவதசாரம் இரண்டாம்பாகம்	18	00
அட்டை பைண்டு	23	00
தேவீ பாகவதசாரம் மூன்ரும் பாகம் சாதா பைண்டு	18	00
,, ,, காலிகோ	23	00
ஸ்ரீ தேவீ மாகாத்மியம்	9	00
,, ,, அட்டை பைண்டு	12	00
தேவீ மாஹாத்மியம் (மூலம்)	5	00
தேவீ ஸ்தோத்ரங்கள்	2	50

	ரூ.	பை.
உபநயனம்	3	00
,, காலிகோ	5	00
குருகீதை	3	25
நாரத பக்தி சூத்திரங்கள்	1	75
காலிகோ	3	00
ஜபவிதானம்	4	00
ஸந்தியாவந்தனம் (தமிழ்)	3	00
,, (நாகரம்-தமிழ்)	4	50
தேவீஸூக்தங்களும்	2	50
உபநிஷதங்களும்	2	50
புருஷஸூக்தம்	3	00
பூஜாவிதானம் (தமிழ்)	8	00
ஹோமவிதானம்	11	00

IV. ஸ்தோத்ரங்கள்

	ரூ.	பை.
ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம்	7	50
ஸௌந்தர்யலஹரீ (மூலம்) (நாகரம்-தமிழ்)	1	50
சிவானந்தலஹரீ பாஷ்யம் (அச்சில்)		
,, (மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	00
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	10	00
,, ,, பாராயணம்	6	00
,, ,, மூலம்	2	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்	6	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீவித்யா	5	00
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	7	00
,, ,, ஸ்தோத்ரம் (பாராயணத்திற்குரியது)	3	00
ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்ரங்கள்	1	00
பஜகோவிந்தம்	1	00
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	2	00
,, அட்டை பைண்டு	4	00
ஆதித்ய ஹ்ருதயம்	1	25
சித்தி விநாயக பூஜை	0	50
நவராத்திரி பூஜை	1	00
வரலக்ஷ்மி விரதம்	1	00
ஸ்ரீ கிருஷ்ண கர்ணாமிர்தம்	12	00

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்
(மாதப் பத்திரிகை)

கடந்த 62 ஆண்டுகளாகத் தமிழில் வெளிவந்துகொண்டிருக்கும் எங்கள் மாதப் பத்திரிகை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக விளங்கி மத உண்மைகளைப் புகட்டுகிறது. உங்கள் உள்ளம் உயர, நீங்கள் ஹிந்து மதத்தை உள்ளபடியே புரிந்துகொள்ள அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம் : ஆண்டுச் சந்தா ரூ. 12/- ஆயுள் சந்தா ரூ. 150/-

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-600 004.

I ஸ்ரீ ராமகிருஷ்ணர்

	ரூ.	பை.
ஸ்ரீராமகிருஷ்ணரும் அவருடைய சீடர்களும்	11	00
ஸ்ரீராமகிருஷ்ணரது திவ்விய சரிதப் பாடல்	4	00
ஸ்ரீராமகிருஷ்ணர் சரிதம்	3	00
ஸ்ரீராமகிருஷ்ண கதாமிருதம் (முதல் பாகம்)	8	00
,, (இரண்டாவது பாகம்)	8	00
ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள்	15	00
ஸ்ரீராமகிருஷ்ண உபநிஷதம்	4	30
ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்	4	00
குருதேவர் வாக்கியம்	1	25
ஸ்ரீராமகிருஷ்ணரின் கதை	0	35
ஸ்ரீராமகிருஷ்ணர் (மூவண்ணப் படங்களுடன்)	4	00

II. ஸ்ரீ சாரதாதேவியார்

	ரூ.	பை.
ஸ்ரீ சாரதாதேவியார் அவரது வரலாறும் திருவாக்கும்	10	00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம்	3	00
தூய அன்னையார் ஸ்ரீ சாரதாமணி தேவியார்	1	25

III. சுவாமி விவேகானந்தர்

	ரூ.	பை.
விவேகானந்தரின் அறிவுரைகள்	1	50
சுவாமி விவேகானந்தர் (ரா கணபதி) அட்டை பைண்டு	12	00
ஸ்ரீ விவேகானந்தர் சரிதம்	4	00
சிறுவர்களது விவேகானந்தர்	2	00
விவேகானந்தர் (மூவர்ணப் படங்களுடன்)	2	50
சுவாமி விவேகானந்தரின் சம்பாஷணைகள்	6	00
,, ,, காலிகோ	7	00
இந்தியப் பிரசங்கங்கள்	10	00
இந்தியப் பிரசங்கங்கள் (காலிகோ)	15	00
புதிய இந்தியாவைப் படைப்போம்	1	00
கர்மயோகம்	6	00
பக்தியோகம்	1	50
இராஜயோக உரைகள்	2	50
நமது தாய்நாடு	2	00
தியானமும் அதன் முறையும்	3	00
நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை	1	00
கல்வி	2	50
பாரதப் பெண்மணிகள்	2	50
தற்கால இந்தியா	1	00
சிகாகோ பிரசங்கம்	1	00
எனது வாழ்வும் பணியும்	0	85
எனது போர்முறை	0	75
எனது குருநாதர்	1	50
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	60
விவேகானந்தர் பாதையிலே	1	00

IV. இதர நூல்கள்

	ரூ.	பை.
ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகளின் வரலாறும் ஞானோபதேசமும்	3	00
சுவாமி ராமகிருஷ்ணானந்தர்	3	50
மகான் துர்க்காசரண நாகர்	1	50
திரு அருள் மொழி	6	00
திருக்கயிலாயகிரி யாத்திரை	3	00
இந்து மத ஸாரம்	3	00
பக்தி மார்க்கம்	2	00
அருள்நெறிக் கதைகள்	6	00
பக்திக் கதைகள் (அச்சில்)		
ஆன்மிகக் கதைகள் (அச்சில்)		
நாரதர் காலம்	4	75
அத்யாத்ம ராமாயணம் (அச்சில்)		
கடோபநிஷதம் (நாடகம்)	2	00
ப்ரச்னோபநிஷதம் (நாடகம்)	2	00
பஜனாவளி	11	00
ஆத்ம நிவேதனம் (அச்சில்)		
நடராஜ வடிவம்	0	35
ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனம்	0	20
ஆராத்ரிகம்	0	20
ஸ்ரீ ராமகிருஷ்ண மடமும் சங்கமும்	2	00

V. முரசு நூல்கள் (பாக்கெட் சைஸ்)

	ரூ.	பை.
ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஞானமுரசு	0	80
ஸ்ரீ சாரதாதேவியாரின் அன்பு முரசு	0	80
ஸ்ரீ விவேகானந்தரின் வீர முரசு	1	00
ஸ்ரீ கிருஷ்ணரின் யோக முரசு	0	80
ஸ்ரீராமபிரானின் தர்ம முரசு	1	00
ஸ்ரீ சங்கரரின் வேதாந்த முரசு	1	00
புத்தரின் அற முரசு	0	80

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரர்களுக்கு, சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் எல்லா வெளியீடுகளின் மீது 5% கழிவு தரப்படும். நூல்களை அனுப்புமாறு எழுதும் கடிதங்களில் சந்தாதாரர்கள் தங்களின் சந்தா எண்ணையும் கழிவு நீக்கி நூல்களை விற்பனைக்குப் பெற விரும்புவதையும் குறிப்பிடக் கோருகிறோம்.

சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்; சுடர்கள் 1-10

சுவாமி விவேகானந்தர் பேசியவை, எழுதியவை அனைத்தும் 10 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அவற்றுள் 1,4,6,7,9 ஆகிய ஐந்து தொகுதிகளும் கைவசம் இல்லை. ஏனைய ஐந்து தொகுதிகளும் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு பகுதியும் 500 பக்கங்களுக்குக் குறையாதது.

சாதா பைண்டு விலை ரூ. 5-00

காலிகோ பைண்டு ரூ. 6-50